போன் நெ. 15. விலை 2 அணா. REGD No. 4642

திராவிடநாடு

மலர் 13 | 24–10–54 | இதழ் 17

வெற்றி! வெற்றி!! தி. மு. க. வெற்றி!!!

வெறி பணிந்தது ★ தியாகம் வென்றது

“அப்போதே செய்திருக்கலாமே!”

“ஆணவக்காரரே! எம் உயிர் கொண்டீரே!!”

முரசு கொட்டுங்கள்— வெற்றி! வெற்றி!! மகத்தான வெற்றி!!!

சுடர் முகம் தூக்கி, துந்துபி முழக்குவீர்—தியாகம் வென்றது! திமிர் பணிந்தது!!

தாயகத்து மக்களே! உங்கள் தொண்டர்களின் அறப்போர், அதற்குரிய பரிசைப் பெற்று விட்டது.

அஞ்சா நெஞ்சர்களே! ஆற்றல் மிகும் சீயங்காள்!! அறப்போர்த் தொண்டர்காள்!!! — உங்களது ஆற்றலை, எள்ளி நகையாடியோர், உண்டு; ஏசியோருண்டு; தூசி என்று செப்பினோருண்டு. அவர்களையும் அழையுங்கள்! பெற்ற வெற்றியைக் காட்டுங்கள்!!

எலிகள் என்றனர், எதிரிகள்—'இதுகளா!' என்றனர்-'நான் சென்ஸ்' என்றார் நாடாளும் பண்டிதர்—'காட்டுமிராண்டி' என்று கர்ஜித்தார்—வென்றது, நாம்; அவர்களல்ல.

'வெங்காய பர்மிட், வேண்டும்!', 'வெளி நாட்டு பர்மிட், கொடு!', 'என் ஆசாமிக்கு ஒரு துணை மந்திரிப் பதவியாவது கொடு', என்று கூறி, கொள்கையை விலைபேசி, கூலி பெறுவோர் உண்டு. அந்தக் கூலிக்கான வேலையென்று, கொக்கரிக்கவும் செய்வர்—தம்மீது குமுறும் எரிமலைகளாகவும் வெடிப்பர். அந்தக் 'கோமான்களை' அழைக்கிறோம்—பாரீர், அறம் வென்றது. ஆணவம் தோற்றது.

“சின்ன விஷயம். இதற்காக ஒரு கிளர்ச்சியா?”

“இதனால், யாருக்குப்பிரயோஜனம்? இதையெல்லாம், கவனிப்பதா ஒரு அரசாங்கத்தின் வேலை...”

“சட்டப்படி குற்றமல்லவோ, இது!”

“பிடி, அடி, பூட்டு!”

“காரை ஜப்தி செய்; வீட்டை வளைத்துக்கொள்”

“ஐகோர்ட்டை நாடு; அப்பீலைப் போடு”

என்னென்ன கண்டோம். இறுமாப்பின் சின்னமாகப் பவனிவந்த அற்றை நாள் முதலமைச்சர் ஆச்சாரியார், மிரட்டியதென்ன; அதட்டியதென்ன! எறும்பென்றார்-எதிரி நெம்பர் ஒன்று என்றார்-இவர்களை விடுவேனோ? என்றார்-இவர்களை மக்களே மதிக்கவில்லையென்றார்—இப்படிச் சொல்லியதுமட்டுமா! பட்டப்பகலிலே, அவரது ஆட்சி அம்புகளின் துப்பாக்கிக் குண்டுகள் மூலம்' இரு உயிர்களை இங்கிருந்து பிரித்தார். லால்குடி நடராசன்-திருச்சி கேசவன் எனும் இளங்காளைகள் இருவரை வேட்டுக்கு இரையாக்கினார். அந்த வீரத் தியாகிகளின் கல்லறைகளிலே புல் முளைத்துவிட்டது, அவரோ, பூணாரம் பூண்ட புது 'வியாசர்'போல பவனிவரத் தயங்கவில்லை. உயிரிழந்த உத்தமன் நடராசன், சாதாரணத் தையல் தொழிலாளி-அவரது தவிக்கும் தாயும் துடிக்கும் தந்தையும், இழந்த மகனை எண்ணியவாறு, இன்றும் கண்ணீர்விட்டுக் கொண்டிருக்கிறார்கள். திருச்சிக் காளை கேசவன், நெசவுத் தொழிலாளர்-இன்னும் இரு தினங்களில் அம்மகனை மணக்கோலத்தில் காண இருந்தனர் பெற்றோர்—ஆச்சாரியார் ஆட்சி பிணமாகத் தந்தது அவரை. மாலை சூட்ட வேண்டிய உடலிலே, வாய்க்கரிசி போட்டனர் மாதா பிதாக்கள். அந்தக் கோரக் காட்சிக்குக் காரணமானவர், இதோ, ஆண்டவன் திருவடிகளைப்

சந்தாதாரர்கள் பார்வைக்கு

24—10—54 முதல் "திராவிட நாடு" சந்தாதாரர்களின் நெம்பர் மாற்றப்பட்டுப் புது நெம்பர் தரப்பட்டிருக்கிறது. சந்தாதாரர்கள் தங்கள் புதிய சந்தா எண்ணைக் குறித்துக்கொள்வதோடு, பணம் அனுப்பும்போதும், கடிதம் எழுதும்போதும் புதிய சந்தா நெம்பரையே குறித்து எழுதும்படியும் கேட்டுக்கொள்கிறோம்.

பொறுப்பாளர்

பெற அனுதினமும் ராமாயண காலட்சேபம் நடத்திக்கொண்டிருக்கிறார், நாமோ, இழந்த உயிர்களையும், செய்த தியாகத்தையும் எண்ணி எண்ணி வெதும்பிக் கிடந்தோம். 'வெடிக்கும் எரிமலையாகலாமா?' என்று வேண்டிய காளைகளும் உண்டு. அவர்களுக்கெல்லாம் அகமகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்—நமது சகோதரர்கள் தந்த உயிர் வீணாகவில்லை—நாம் சிந்திய ரத்தம், நீரல்ல. இதோ வெற்றி—அந்த வீரக் காளைகளுக்கு ஒருமுறை வணக்கம் செலுத்திவிட்டு, நாட்டுக்குச் சொல்லுங்கள்,

டால்மியாபுரம், கல்லக்குடி ஆகிறது.

அந்தகார உத்தரவை, டில்லிதர்பார் அழித்துவிட்டது.

பதினெட்டு வயதுக்காளை சந்தானம் ஜோசப், இருபத்தொரு வயது வீரன் ரத்தினம், பத்தொன்பது வயது ஈஸ்வரன், இருபத்தேழு வயது முனிசாமி, சதாசிவனுக்கு வயது இருபத்து இரண்டு, அண்ணாமலைக்கு வயது இருபத்தி நாலு, இருபத்தாறு வயதுடைய நாராயணன், பத்தொன்பது வயது செபாஸ்டியன் — இவர்கள் எல்லாம், அறப்போரின் சின்னங்களை உடம்பிலே தாங்கிக்கொண்டு; காலிழந்தோராக, உறுப்பிழந்தோராக, உடலில் குண்டடிபட்டோராக, நம் கண்முன்னே நிற்கிறார்கள். கடுமையான சோதனை-களங்கண்டு ஓடிடவில்லை—காயம் பெற்ற பின்னும் மாறிடவில்லை—அந்தக் கடமை வீரர்கள் காட்டிய கண்ணியத்தின் பலன், இதோ! கண்முன்னால் கிடைத்துவிட்டது — தியாகம் வென்றுவிட்டது. திமிராதிக்கம் பணிந்துவிட்டது.

சின்னஞ் சிறு இளைஞன், சிங்காரச் செல்வன், வீட்டுக்கு மூத்த மகன் குமாரவேல்—அவருக்கு 'ஆறுமாதம், என்றது, சட்டம். அஞ்சேன் - என்றார்; சென்றார். சிறைக்கூண்டிலிருந்து திரும்பினார், சடலமாக. சிறிது நாட்களுக்கெல்லாம், செத்தார். அந்தச் செயல்வீரனின் ஆசைக் கனவு, நினைவாகிவிட்டது, ஆனால், அவரில்லை; நாம் இருக்கிறோம்—நமது கண்களில் தேங்கும் கண்ணீர் இருக்கிறது,

கருணாநிதி-கலைஞர் என்கிறது நாடு, செயல்வீரர் என்கிறது மக்கள் மன்றம் —அவர்தான், இந்த அறப்போரின் தளபதி—அந்த வீரரை, கொள்கை முழக்கிடும் புலியை, இழுத்துச்சென்று பூட்டிற்று, ஆறுமாத காலம். முல்லை சத்தி, கஸ்தூரிராசு, குழந்தைவேல்-எனும் அரும்புகளோடு. 'அவர்கள் போனால், நாங்கள் இதோ' என்று புறப்பட்ட சோமசுந்தரம், மருதநாயகம், இரத்தினம், வளர்மதி, முருகேசன், சக்கரபாணி, மருதமுத்து, வேணுகோபால், பாண்டியன், கலைமணி, காளிதாஸ், முனிசாமி, இராம. சுப்பையா, பாண்டுரங்கன், கமலம், பரமானந்தம், முருகேசன், எத்திராஜ், கிருஷ்ணமூர்த்தி, அஜீப், ராவணன், மடகடல், ராமன், சின்னையன், ராபி, நல்லமணி, நடராசன், தங்கன், தமிழமுத்து, சின்னத்துரை — இத்துணைப் பேரும், இளைஞர்கள்தான். ஆசை மனைவியும் அருமைக் குழந்தைகளும் வீட்டில் கிடக்க, சிறைக்கூண்டிலே சித்ரவதைக்கு ஆளாயினர், மூன்று மாதங்கள். அவர்கள் எழுப்பிய முழக்கம்—வீணாகவில்லை—வெற்றி இதோ!

கல்லக்குடியாகிறது டால்மியாபுரம்

கட்டளையிடுகிறது, டில்லிபீடம்.

கண்ணீர் தேங்கிய கண்களிலே, ஒரு புது ஒளி! வடவர் ஆதிக்கத்துச் சின்னம் அழிக்கப்பட்டு தமிழ்ப்பெயர் இனிப்பளிச்சிடும். சிறுபிரஷ்—கொஞ்சம் பெயிண்ட்-கால் மணி நேர வேலை; ஆனால், அதனைச் செய்ய, இந்த அரசு காவு கொண்டிருக்கும் உயிர்கள் இரண்டு. செய்த சித்ரவதை ஏராளம்,

பெயர் மாறப் போகிறது—ஆனால், அந்த அறப்போரிலீடுபட்ட கவிஞர் கண்ணதாசன், அம்பில் தர்மலிங்கம்-அண்மையில் காங்கிரஸ் 'மூட்டை'யைத் தேர்தலில் தோற்கடித்தாரே, அவர்தான்— கல்லக்குடி தம்புசாமி, வடிவேலு, ராதாகிருஷ்ணன், ஷரீப், கோபாலகிருஷ்ணன், சதாசிவம், நிமலன், நாராயணன், சந்தானம், ஜோசப், ரத்தினம், செபாஸ்டின் ராஜு, முனுசாமி, ராமதாஸ், பிச்சை, சூசை, துரைராஜ், ரங்கராஜ், பங்காரு சாமி, தஸ்தகீர், மருதநாயகம், கருமலை, சண்முகம் ஆகியோர் மீது தொடரப்பட்ட வழக்கு உயர்நீதி மன்றத்திலிருக்கிறது. வீட்டிலொரு காலும், சிறைக் கோட்டத்தில் மற்றொரு காலுமாக, உலவிக் கொண்டுள்ளனர், அந்த வீரர்கள். அவர்களிலே பலர், அறப்போர்க் களத்திலே, உதிரம் சிந்தியவர்கள். உதையும் குத்தும் பெற்றவர்கள். கவிஞர் கண்ணதாசனின் கறுத்த முதுகு, இன்னும் காட்சி தருகிறது— பட்ட சித்திரவதையைச் சிசப்புவதுபோல. அவர்கள் மீதே, வழக்கு. இந்த நிலையில், எட்டுகிறது, இந்த நற்செய்தி. துயரம் ஒரு பக்கம். எனினும், அவைகளை ஊடுருவிக் கொண்டு, ஓடி வருகிறது மகிழ்ச்சி.

"பெயரை மாற்றுவது பெரிய பிரச்னையா?"

அரசியலை, ஆகாயத்தில் பறந்தவாறு கணிக்கும், சகல கலாவல்லவர்கள் கேட்டனர், இவ்வாறு.

"பெரிய பிரச்னை இல்லை. ஒப்புக் கொள்கிறோம்."

என்றோம், இவ்வளவு சாதாரணப் பிரச்னையைச் செய்து தர, ஏன் பிடிவாதம் செய்கிறது டில்லி?— எனக் கேட்டோம். சிறுபிரஷ்— கொஞ்சம் பெயிண்ட்—கால் மணி நேர வேலை தானே. இதற்கேன், இவ்வளவு பிடிவாதம் செய்கிறது, நேரு ஆட்சி? அதற்கு மத்தளம் கொட்டுகிறது ஆச்சாரியார் தர்பார்?— எனக் கேட்டோம். பதில் கூறினாரில்லை. காரணம், அதற்குக் கூறவேண்டிய பதில், தெரியாததால் அல்ல; கூறினால் எங்கே தி. மு. க கூடாரத்துக்குள் சேர்ந்துவிட்டோம் என்ற குற்றம் சுமத்தப்படுமோ, என்ற அச்சத்தால்.

உண்மையுணர்ந்தோருண்டு—உரைக்க அஞ்சினோருண்டு—திரித்துப் பேசலாமென எண்ணியோருண்டு—திருகுதாளம் போட்டோருண்டு—தெந்தினபாட்டு, சந்துமுனைக் கூத்து, எல்லாம், கண்டோம். எனினும், அவைகளை எண்ணினோமில்லை. நம் வழி சென்றோம், வென்றோம்.

வெற்றி! வெற்றி!! மகத்தான வெற்றி!!!—இது.

எங்கேயும் இப்படிப்பட்ட அறப்போர் நடைபெற்றிருக்க முடியாது.

நடைபெறுமாறும், எந்த அரசும், நிலைமையை வளர்க்காது.

ஆனால், இங்கே! மாவட்டக் கழகங்கள் தீர்மானம் செய்தும், ஊராட்சி மன்றங்கள் வேண்டியும், மக்கள் எல்லாம் மகஜர் கொடுத்தும், மறுத்தனர். நாம், எத்தனையோ முறை வேண்டி

யும், அலட்சியம் காட்டினர். காரணம், பிரச்னை சாதாரணம் என்பதா? அல்ல! அல்ல!! "ஏ! தி. மு. க-வே!! இதற்கா, இவ்வளவு படை திரட்டுகிருய். எவ்வளவு சாதாரணமான விஷயம். உன் அற்ப புத்தியை மக்களுக்குணர்த்துகிறேன், பார். நாளைமுதல், டால்மியாபுரம், கல்லக்குடி என்ற பெயரால் விளங்கும். இனி, என்ன செய்வாய்?" என்று டில்லி செய்திருக்கலாம்! செய்யத் தாமதித்தாலும், சென்னை சர்க்கார் தூண்டி, உத்தரவு கொண்டுவந்திருக்கமுடியும். ஆனல் அன்று ஊராண்ட ஆச்சாரியார், விதவிதமான வியாக்யானங்களைக் கண்டுபிடித்தார்—காமராஜருக்கு நல்லபெயர் ஏற்படக் கூடிய அளவில், பழிபெற்ருர்! பலியும் ஆனர்!! அகில உலகமும் போற்றும் மேதாவிலாசம் படைத்தவராம்-ஆனல் இந்த விஷயத்தில், அடிமட்டமானர். அரசியல் உலகிலேயே அழியாத இழிச் சொல் ஏற்று, என்றும் மறையாத அவமானம் பெற்ருர்! இன்று, எங்கோ, அலைகிருர். எதைஎதையோ பிடித்துத் தொத்த முயலுகிருர்!

அவருடைய ஆணவத்துக்கு மட்டுமல்ல, டில்லிபீடத்தின் ஆதிக்கத்துக்கும், வேட்டுவைக்கும் அறப்போராகக் கருதப்பட்டது—கல்லக்குடி பெயர் மாற்றப் போராட்டம்.

"டால்மியா!—ஒரு பணமுதலை. அது தான் காரணமா?"

"அதுமட்டுமல்ல; இங்கும் பல பண முதலைகளும், கல்முதலைகளும் உண்டு"

"பிறகேன்?"

"அவர் ஒரு வடநாட்டார்!"

"அதனல் என்ன?"

"வேதங்கள் சமஸ்கிருத பாஷையில் இருக்கின்றன; அது கஷ்டமான பாஷை; இதைப் பெரியோர்களே ஒப்புக்கொண்டிருக்கிருர்கள்; மிகப் புராதனமான பாஷை; உயர்ந்த பாஷை; உலகத்துக்கெல்லாம் உயர்ந்த பாஷை; ஹிமாலயம்மாதிரி இருக்கிறது. பலர் கிட்டக்கூட போகாமல் தூர விலகிவிடுகிருர்கள்; மலைமீது பனி மூடிக் கிடக்கிறது; ஆகவே, ஏறுவது கஷ்டம். அப்படியே வெகு பிரயாசைப்பட்டு சிலர் ஏறினலும், வேதங்களின் பொருளை அறிவது கஷ்டம். ஆதலால்தான் பொருள் தெரியாமலே உச்சரிக்கிருர்கள். அதுவே போதும்"

ஆச்சாரியார்

[சென்னை வேதசபையில் 11ல்]

"வடக்கிலிருந்து தெற்கு விடுபட வேண்டுமென விரும்புகிறேம். ஆனல் அதனைப் பல காரணம் சொல்லி, மறுக்கின்றனர் மாற்ருர்! அவர்கள் கண்கள் திறக்கவும், பிறர் எம்மை அறியவுமே, இந்தப் போராட்டம்"

"இந்த லட்சியததை ஈடேற்ற இது தானு, வழி!"

"இதுவே, அல்ல வழி. பல வழிகளில் இதுவும் ஒரு வழி"

"எப்படி?"

"டால்மியாவின் பெயர் இருப்பது—அந்த நபரின் ஆதிக்கம் இருப்பதை உணர்த்துகிறது. அந்த நபரைப் போல, ஆயிரக்கணக்கானேரின் கொள்ளைக் கூடமாக ஆகிவிட்டது, எம் நாடு. இவ்வண்ணம் கூறுவதை, கொள்கையெனவும் ஏற்க மறுக்கின்றனர், மாற்ருர். வடநாடு, ஆதிக்கம் செலுத்துகிறது! என்கிறேம். ஏற்க ஒப்புவதில்லை, அவர்கள். அந்த கறுத்த உள்ளங்கள், நிலைமையை உணரவும் அறியவுமே, இந்தப்போர். இது, ஒரு அடையாளப் போர்தான்!"

"சர்க்கார் பெயரை மாற்றிவிட்டால் ....?"

"மாற்ருது என அறிவோம்—மாற்றிவிட்டால், அது, வடநாடு தென்னுடு பேதம் பாராட்டவில்லையென்பதைக் காட்டிக்கொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்கும்"

இப்படிப் பல விளக்கங்கள்! ஓரிடம் என்றல்ல, ஊர்தோறும்! நகரந்தோறும். ஒரு மாதமல்ல — ஐந்து மாதங்கள்; ஒருவர், இருவரல்ல—கழகப் பேச்சாளர்கள் அனைவரும். கண்ட பலன் என்ன? நான்சென்ஸ், பட்டம்! காட்டுமிராண்டி எனும் இழிச்சொல்!! கனிவு பிறக்கவில்லை—கர்ஜனை எழும்பிற்று! "திராவிட முன்னேற்றக் கழகமா? அவர்கள் கேட்டு, நாம் கொடுப்பதா! அவர்கள் குரலொலியை நாம் கவனித்ததாகக் காட்டிக்கொண்டாலே இழுக்காயிற்றே?" என்று கருதினர், வடவர். கொஞ்சம் பெயிண்ட்—சிறு பிரஷ்—கால்மணிநேரவேலை. ஆனல், அதிலேதான், தமது கவுரவம் தொத்திக் கிடப்பதாகக் கருதினர்! அதற்குப் பணிந்துவிட்டால், தமது மானமே போய்விடுமென எண்ணினர்! 'இவர்கள் கேட்பதாவது, அதை நாம் செய்வதாவது, என்றெல்லாம் கருதிற்று அகில உலக ஜோதி. அந்த ஆணவத்தின் பலன் — இரு திராவிடர்கள், பிணமாயினர்! பலர், நடமாடும் பிணங்களாயினர்! சிந்திய இரத்தம் ஏராளம்! சிறைக் கதவு திறந்தது! தி. மு. க. பொதுச் செயலாளரையும், நெடுஞ்செழியன், மதியழகன், சம்பத், நடராசன் முதலியோரையும் கொண்டு பூட்டிற்று! மூன்று மாதம்! ஆறுமாதம்!! மூகில்கிழித்துலவும் முழுமதியினை, மக்

நன்றி

3—10—54 ஞாயிறன்று நடைபெற்ற திருச்சி மாவட்ட மன்றத் தேர்தலில் தங்கள் மேலான வாக்குகளை அளித்து வெற்றி பெறச் செய்த லால்குடி தொகுதி வாக்காளர்களுக்கும், வெற்றிக்காக அல்லும் பகலும் அரும்பாடுபட்டு எல்லா வகையிலும் ஒத்துழைத்த அருமை நண்பர்களுக்கும், பேராதரவு காட்டிய பொதுமக்களுக்கும், வாழ்த்துகள் வழங்கிய தோழர்களுக்கும், என் இதயபூர்வமான நன்றியறிதலுள்ள வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அன்பன்,

அன்பில் தர்மலிங்கம்

கள் மன்றத்திலிருந்து கொண்டு போய், காராக்கிரகத்துக்குள் பூட்டினர்! முடிவு,

டால்மியாபுரம் கல்லக்குடியாகிறது.

டில்லி பீடம், பணிந்திருக்கிறது—இன்று.

தேள் ஒரு பக்கம்! வாள் ஒரு பக்கம்!! இடையிலே தென்றல் என்பதுபோல, சென்னை சர்க்கார் ஒரு பக்கம்—டில்லி பீடம் மற்றேர் பக்கம், இடையிலே தி. மு. கழகம். வாய்த்த சந்தர்ப்பம் இதுதான். வாட்டுகிறேன்— பூட்டுகிறேன்— பொது வாழ்விலிருந்தே ஓட்டுகிறேன் என்று ஓங்காரக் கூச்சலிட்டார், ஆச்சாரியார். "காமராஜரே! காங்கிரஸ் கண்யர்களே! காணுங்கள் இந்தக் காட்சியை. ஆள்பவர், ஆச்சாரியாராயினும் ஆளும் கட்சியின் தலைவராயிற்றே நீங்கள். தலையிடுங்கள். நீதி பெற உதவி புரியுங்கள்." என்று எடுத்துரைத்தோம், பன்முறை. எல்லோரும், மௌனிகளாகவே யிருந்தனர். நமது கோரிக்கையை அலட்சியமாகவே கருதினர். இன்று,

டால்மியாபுரம், கல்லக்குடியாகிறது.- அதுவும், காமராஜர் ஆண்டு கொண்டிருக்கும்போது.

இந்தப் பெருமையில், அன்பர் காமராஜரும் பங்கு பெறுகிருர்—மக்கள் நினைப்பார்கள், 'காமராஜர் கண்ணியவான். நியாயத்தை உணர்ந்து நீதி பெற முனைந்திருக்கிருர்.' என்று.

உண்மை தான், ஆச்சாரியார் எனும் ஆடிக்காற்று ஓங்கி அடித்து விட்டுப் போனதால், அதற்குப்பின் வந்தது வரண்ட காற்ருயினும் கூட, தென்றலாகத்தான் தென்படச் செய்யும், மக்களுக்கு. அந்த வகையில்,

[16-ம் பக்கம் பார்க்க]

தயாளர்கள் பார்வைக்கு!

"அக்-13 புதன் கிழமை மாலை, வெங்கடரங்கம்பிள்ளை தெரு இளைஞர் நேயர் கழகச் சார்பில் சொற்பொழிவாற்றிய ஈ. வே. இராமசாமி (நாயக்கர்)யின் பேச்சைக் கேட்டிருந்த எவரும், 'இந்த சர்க்கார் என்ன செய்கிறது?' என்றே கேட்டிருப்பார்கள். இந்துமதத்திலுள்ள எல்லாக் கடவுள்களையும், அம்மன்களையும் இழிவாகப் பேசினார். குறிப்பாக இராமாயணத்தைப் பற்றியும் கேவலமாகப் பேசினார்.

இந்து மதக் கடவுள்களும் ராமாயணமும், தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ளும் சக்தியுள்ளவை. ஆனால், இராமாயணத்தைப்பற்றி, ஈ. வே. ராவிடமிருந்து விஷயம் அறிய வேண்டுமென்கிற விருப்பமுடையோர் யாரும் இந்தியா முழுமையும் இருக்கமாட்டார்கள்— இந்தியாவுக்கு வெளியில் வேண்டுமானால் மிஸ் மேயோ போன்ற ஆராய்ச்சிக்காரர்கள் இருக்கக் கூடும்!

நான் கேட்பது இது தான். சென்னை சர்க்கார் என்ன செய்கிறது? தற்போது நடப்பது, எல்லோருக்கும் நீதி வழங்கும் சர்க்கார் என்று கூறப்படுகிறது. இத்தகைய சர்க்காரில், மிகப் பெரிய மதமான இந்துமதத்தை, ஈ. வே. ரா இப்படித் தூற்றுகிறார். அவரால் நடத்தப்படும் அரசியல்—மதவாதப் பிரச்சாரம், முழுக்கமுழுக்க வகுப்புவாதத்தையே அடிப்படையாகக் கொண்டது. கவர்னரோ அல்லது முதல் மந்திரியோ அவரது பிரசங்கத்தைக் கேட்டிருந்தால்தெரியும்!"

*

இப்படியோர், கடிதம்! 'இந்து' ஏட்டில்!! திருவல்லிக்கேணி வட்டாரத்திலிருந்து, சர்மா, எனும் நபரால், தீட்டப்பட்டிருக்கிறது.

"எனக்கு, அரசியலில் சம்பந்தம் கிடையாது"

"நான், இந்த நாட்டுக்கு வரிசெலுத்தும் ஒருவன்"

"அந்த உரிமையால் கேட்கிறேன்"

என்றெல்லாம் எழுதியிருக்கிறார். அந்த நபர் எழுதியதைவிட, அதை அப்படியே பிரசுரித்துப் பிரமாதப் படுத்தியிருக்கிறதே 'இந்து' ஏடு, அதுவே கவனத்துக்குரியது.

எத்தனையோ சர்மாக்களைத் தாண்டி, பெரியாரின் எண்ணங்கள் மக்கள் மன்றத்திலே இடம்பெற்றுவிட்டன. அவரது முழக்கத்தையும், அவரது தோழர்களின் சொல்லாற்றலையும் கண்டு, இங்குள்ள முப்பத்து முக்கோடி தேவர்களில், யாராவது கோயில்களைவிட்டு ஓடியதாகவோ – மனிதா! அம்மையப்பனல்லவா. நான்? படைத்தவனையிற்றே, உன்னை; இப்படிப் பேசலாமா—என்று, இறங்கிவந்து கேட்டதாகவோ, தெரியவில்லை. அவரவர்கள், தத்தமது உண்ணல்–உடுத்தல்–உறங்கல் காரியங்களை, குருக்கள்மார் முடித்துவைக்க, கோலாகலமாகத்தான் இருந்துவருகின்றனர்! எனினும், கோபம் பொத்துக்கொண்டு வருகிறது, சர்மாக்களுக்கு.

'உனக்கென்ன? மானிடப்பதர் நீ! மகேசனுக்கே பெரியார் பேசுவது பிடிக்கவில்லையென்றால், அவர் கவனித்துக்கொள்வார். நீ, சும்மாயிரு!' என்று, அறிவாளர்கள் கூறிவிட்டால், என்ன செய்வதென்கிற அச்சம், அன்பர் சர்மாவுக்கும் ஏற்பட்டதுபோலும். அதனால், 'இராமாயணமும், கடவுள்களும் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளமுடியும். எனினும்.........!' என்று இழுக்கிறார். எரிச்சலால், ஏதேதோ, கூறுகிறார்!!

வரி செலுத்துகிறாராம், சர்மா! பிறர் என்ன, வரிவாங்கிக் கொண்டா இருக்கிறார்கள்? சர்மாவின் கும்பலாவது சர்க்காரின் கஜானாவுக்குமட்டும் வரி செலுத்திக்கொண்டிருக்கும்! பெரியாரின் இனம், சர்க்காருக்கு மட்டுமல்ல, சர்மாக்களுக்குமல்லவா வரி செலுத்திக்கொண்டிருக்கிறது!!

வரிசெலுத்தும் உரிமையால், கேட்கிறாராம், 'இந்தச் சர்க்கார் என்னசெய்கிறது?' என்று.

அதே போல வரி செலுத்தும் உரிமையால்தான் பெரியாரும் கேட்கிறார், "ஆண்டவன் சர்க்கார் என்ன செய்கிறது?" என்று.

அரசுக்கு வரி செலுத்துகிறாராம், சர்மா! அதனால் தடியெடுத்துப் பாய வேண்டுமாம்!! ஆள்வது காமராஜ் சர்க்கார்—காமராஜரோ, ஆச்சாரியாருக்கு எதிரி—நாமோ ஆச்சாரியார் கூட்டம்—நம்மை அனுசரித்துப் போவதில் லாபம் உண்டு என்பதைக் காமராஜ் எண்ணுமலில்லை. இப்படியொரு 'வெடிகுண்டை' வீசினால் நம்மவாளுக்கு நல்லவராக நடக்கும் எண்ணத்தில் பாய்வார். ஈ. வே. ரா. கூட்டம் புலியாகும்! பாயாவிட்டால் நாம் தேள் போலக் கொட்டிக் கொண்டேயிருக்கலாம் — எப்பக்கம் திரும்பினாலும் லாபம் நமக்குத்தானே, எனும் எண்ணம் போலும் சர்மாவுக்கு. சல்லடம், கட்டி, சவாலுக்கு இறங்குகிறார், அதற்கு ஆதாரமாக, நான் இந்த அரசுக்கு வரி செலுத்துகிறேன், என்கிறார்!! ஆகவே, 'இதனைச் செய்துதா' என்று, அரசாங்கத்தை அதட்டிக்கேட்கத் தனக்குஉரிமை உண்டென்கிறார். உண்மைதான்! அரசின் குடிமகன் என்ற வகையில், அன்பருக்கு உரிமையுண்டு. மறுக்கவில்லை. ஆனால், அவர் கேட்கும் உரிமை, பிறருக்கும் உண்டென்பதை, ஏன் மறந்தார்!!

தன்னுடைய மதமே, சிலாக்கியமானது என்று அவர் கூறட்டும் —அதிலுள்ள கோளாறுகளை, நாம் கூறுவோம்—கூறக்கூடிய உரிமை, அவரைப்போலநமக்கும் உண்டென்பதால்.

முடிவை, மக்கள் மன்றம் செய்து கொள்ளட்டும்!

அதைவிட்டு, அரசின் உதவி நாடி, ஐயயோ — என்று அலறுவானேன்? ஆர்ப்பரிப்பானேன்?

அவர் மறந்து விட்டார்! அவர் இந்த அரசுக்கு மட்டும் தான் வரி செலுத்துகிறார்—ஆனால் இந்த நாட்டுப்பெருங்குடி மக்கள் ஆண்டவனின் அரசுக்கும் வரி செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

வரிகள் மட்டுமல்ல, வாழ்வையும் கூடத் தத்தம் செய்து வருபவர்கள், நாம்! இழந்து நிற்பவர்கள் நாம்!! எதிரே காமராஜரும் கவர்னரும், மனிதர்களாய் இருக்கிறார்களென்ப

தால், அவரால் அதட்டிக் கேட்க முடிகிறது—'இந்தச் சர்க்கார் என்ன செய்கிறது?,' என்று. நாம், யாரைக் கேட்பது!

ஆண்டவர்களே! ஆயிரமாயிரம் காலமாக, ஆறுகாலப் பூஜைக்கும் அந்தணர் வாழ்வுக்கும், நன்செயும் புன்செயும் தத்தம் செய்தோமே—காடு திருத்தி காடு கழனிகளாக்கினோமே—நற்கோயில் கட்டி குளம் அமைத்தோமே—மலைக்கல்லை, மகேசன் உருவாக்கினோமே—அந்தக் கல்லை எடுக்கும்போது உயிரிழந்தோர் உண்டே எம்மிடம்—செதுக்கிய சிற்பி உளி தவறிய நேரத்திலெல்லாம் சிந்திய உதிரத் துளிகள் ஏராளமாயிற்றே! -இதற்கெல்லாம் என்ன பயன் தந்தீர்? சிற்பி, அதோ ஒட்டிய வயிறுடன் கிடக்கிறான்; கோயில் கட்டியவன், குடிசைக்குள்ளே மடிகிறான்; நன்செயும் புன்செயும் வழங்கியவன், நாயினும் கேடாய், பிரகாரத்து வெளியிலே நின்று 'சாமி பிரசாதம்' என்று கையேந்துகிறான். அவனுடைய பரம்பரை, பழங்கந்த லாகியிருக்கிறது. ஆண்டவர்களே, இதுதானா நீங்கள் தரும் பரிசு எமக்கு? உங்களை நம்பி காணிக்கை செலுத்தினர், எமது மூதாதையர்—இப்போதும், செலுத்தத் தவறவில்லை, நாங்கள். அந்தக் காணிக்கைகள், இறையிலி மங்கலங்களாக, பார்ப்பனகுல மக்களின் வரியிலா நன்செய்களாக மாறிவிட்டனவே? மனைவியரின் உடலில் உருளும் வைரங்களாகி விட்டனவே! மாடி வீடுகளாகவும், வாழ்வுச்சோலைகளாகவும் மாறிவிட்டனவே? எமக்கென்ன தந்தீர்? —என்று யாரைக் கேட்பது நாம்? கேட்டால் என்ன பதிலா கிடைக்கிறது! ஆண்டவன் எப்போதும்போலவே இருக்கிறார்—அவரது சிஷ்யர்கள் செய்யும் அக்கிரமங்களை ஒருநாளும் கண்டித்ததாகத் தெரியவில்லை!!

சர்மாவுக்கு, சர்வேஸ்வரன் எங்கே வரப்போகிறார், எனும் துணிச்சல்.

ஆனால், ஆரை அழைக்கிறார்! என்ன செய்கிறீர்கள்? — என்று அதட்டுகிறார்!!

நாம், யாரை அழைப்பது?—இன்னும் 'காணிக்கை' செலுத்தி, சர்மா போன்ற காட்டாரர்கள் வாழும் போக பூமிக்கு எருவிடும், நம்மவர்களைத்தானே அழைக்கவேண்டும்—ஐயா, அனாவசியமாக உருளும் தொந்திகளை விருத்திசெய்யாதீர்கள்! ஆண்டவனை, வீட்டிலிருந்தபடியே பணியுங்கள்—அன்னதானக் கட்டளையையும், கோயில் பூஜைகளையும் குறையுங்கள் — குத்து வெட்டென அலையாதீர் — கோணங்கிக் கூத்தாடாதீர்—என்று. அப்படிச் சொல்வது, கூடாதாம்! சர்மா, புறப்படுகிறார்; சல்லடம் கட்டுகிறார்! சனாதன 'இந்து' தப்பட்டையாகிறது!! என்ன, காரணம்? எண்ணிட வேண்டும், நமது, தயாளர்கள்!!

★

வருந்துகிறோம்

இசைச் செல்வியும், நமது இயக்கத் தோழியருமான ஜி. கஸ்தூரி அவர்களின் தந்தையார் இ. கணபதி அவர்கள் தமது 65-வது வயதில் சென்னையிலுள்ள தனது இல்லத்தில் 3–10–54 அன்று இயற்கையெய்திய செய்தி அறிந்து மிகவும் வருந்துகிறோம்.

*

நீதிக்கட்சி மேதை காலஞ்சென்ற டாக்டர் சி. நடேசனார் அவர்களின் சகோதரரும், சென்னை முன்னாள் மேயரும், கோவை அரசினர் விவசாயக் கல்லூரித் தலைவராக அரும்பணியாற்றியவருமான சி. தாதுலிங்கனார் அவர்கள் 13–10–54 காலை இயற்கையெதினார். அவரது குடும்பத்தாருக்கு, நம்முடைய ஆழ்ந்த, அனுதாபங்கள்.

*

பந்தணைநல்லூர் நாட்டிய கலாநிதி எல். மீனாட்சிசுந்தரனார் அவர்கள் தமது 86-வது வயதில் 14–10–54 காலை மறைவெய்தினார். நாட்டக்கலையின் உயிர்வுக்கும், புதுமலர்ச்சிக்கும் பெரும்பணியாற்றிய பெரியவர், அவர். அவருடைய மறைவு, கலை உலகுக்கு பெருத்த இழப்பாகும். அவரது குடும்பத்தாருக்கு நம்முடைய அனுதாபங்கள்.

★ வயிற்றெரிச்சல் ★

இந்த விசித்திரமான வியாதிக்கு கம்யூனிஸ்டுத் தோழர்கள் ஆட்பட்டுக் கிடப்பதை அறிவீர்கள், நீங்கள். அந்த வியாதி சிலசமயங்களில் திடீரென்று 'என்ன சொல்கிறோம்' என்று அறியாமல்கூட, வார்த்தைகளைக் கொண்டுவந்து கொட்டுகிறது.

அதிலும், 'ஜனசக்தி' ஏட்டில்' 'கே. எம்' என்ற இரண்டு எழுத்தில் பதுங்கியிருக்கும் தோழருக்கு, நம்மைப்பற்றி எழுதுவதென்றால், தனி ஆசைபோலும்.

அவர்களது எழுத்து, பேச்சு ஆகியவைகளைப்பற்றி நாம் கவலைப்படவில்லை — அவைகளைப் புரிந்து கொள்ளவும் தெரிந்துகொள்ளவும் செலவழித்து விழிக்கும் நேரத்தை வேறு நற்காரியங்களுக்குச் செலவிடலாம்.

எனினும், என்ன எழுதுகிறோம்—அதன் பொருள் என்ன என்பது கூடப் புரியாமல், பேனாவும் காகிதமும் கிடைத்துவிட்டது எனும் எண்ணத்தில் எதையாவது எழுதிக்கொண்டேயிருப்பது, சாதாரணதுகளின் சஞ்சல சுபாவம்.

17–10–54 ஏட்டில், அந்த எழுத்தாளர் குறிப்பிடுகிறார்—நாம், "கம்யூனிச எதிர்ப்புவெறிப் பிரச்சாரத்தில்" ஈடுபட்டிருக்கிறோமாம். கம்யூனிச—எதிர்ப்பு—வெறி; நமக்கு இந்தப் பட்டம்! கம்யூனிசக் கொள்கைகளை நாள்தோறும் முழக்கிவரும் நம்மை, இந்தச் சொல்லிட்டு அழைக்கிறார். கம்யூனிசத்தை எதிர்க்கிறோமாம்!—நாம் எதிர்க்கிறோமாம்!! குழந்தையும் கைகொட்டிச் சிரிக்கும் — கூறுகிறார், எழுத்தாளர்,

மித்ரபேதம்-உள்ளொன்றுவைத்துப் புறமொன்று பேசுதல்—சந்தர்ப்பத்துக்காக யாருடனும் சல்லாபம் செய்யும் பண்பு—இவைகள், கம்யூனிசம் என்றால், நிச்சயம் நாம் எதிரிகள்தான்.

ஆனால், கம்யூனிசம் என்பது என்ன என்பதை நன்றாக அறிவோம், நாம். அமெரிக்காவின் ஏடுகள், இங்குள்ள அரசியல் கட்சிகளைக் குறிப்பிடும்போது, நம்மையும் கம்யூனிஸ்டுகள் என்றே அழைக்கின்றன. ஆனால், 'ஏகபோகமிராசு' விரும்பும் தோழருக்கு எரிச்சலாயிருக்கிறதுபோலும். வயிற்றெரிச்சல்—உடலுக்குக் கேடு; உள்ளத்துக்கும் கேடு. தகுந்த சிகிச்சை பெறுக.

★

திக் விஜயம்

"இரவைத்தான் படைத்தாரே, இந்தக் கடவுள்— பகலையும் ஏன் படைத்தார், பாதமோகினியே. உன்னை விட்டுச் செல்வதென்றால், என்னுயிர் என்ன பாடுபடுகிறது, தெரியுமா?", என்று கூறிக் கொண்டே, கட்டிலை விட்டிறங்கினான், அந்த சரசரூபன்.

இரவு முழுதும் தான் பட்ட அனுபவங்களை எண்ணிக்கொண்டு, திறந்த கதவைச் சாத்தியவண்ணம் உள்ளே வந்தாள், உடலை இயந்திரமாக்கிக் கொண்ட, அந்தப்பேதை. கதவு, தட்டப்பட்டது, பகலில் வரும், மற்றோர் பக்தன், நுழைந்தான். 'என் பைங்கிளியே!' என்று தாவலானான். படுக்கையறைக் கதவு, மீண்டும் திறந்து மூடப்பட்டது.

இந்த இரு காட்சிகளையும், கண்டான், அந்தக் கணவன். காச நோய், வேறு—அவனுக்கு. அந்த நோயைப் போக்க, காசு சேர்க்கவே, இந்தக் காரியத்தில் ஈடுபடுவதாகக் கூறுகிறாள், அவள். தட்டிக் கேட்கவோ, அவனுக்குத் தைரியமில்லை. ஏனெனில், திருமணம் ஆவதற்கு முன்பு, இருவரும் அவ்வளவு பாசத்தை வளர்த்துக் கொண்டவர்கள். இன்று, வேலி பாய்கிறாள், மனைவி. அதற்கு விளக்கமும் வேறு கூறுகிறாள். காச நோய் தீர்க்க, காசு தேடுகிறாளாம்? அந்தக் காச நோயே, அவள் தந்த வரப்பிரசாதம் என்று தெரியும் அவனுக்கு. என்ன செய்வான். உரத்துப் பேசினாலோ, ஊர் சிரிக்கும். அவள் சொல் கேட்டு, ஓடி வரவும், ஆட்கள் உண்டு. ஐயோ!—என்று தலையில் அடித்துக் கொள்கிறான். இரவோனும், பகலோனும் கூறும் 'கட்டிலறை மெட்டுகள்' வேறு காதைக் குடைகிறது. பேசும் பிணமாகத் திண்ணையில் கிடக்கிறான்—அவளோ, பிரிய துரையே! பெம்மானே!! என்று துதி செய்து அனுப்புகிறாள், தன்னிடம் வருபவர்களை.

காதல் மொழி பேசி, அவனை அவளும், அவளை அவனும் கவர்ந்த நாட்களில், இருவரும் வெண்ணிலாவும் வானும் போல இருப்பர்— என்றனர், கண்டோர்.

அவளுக்கு அவன்! அவனுக்கு அவள்! ஒருவர் சுகமே, மற்றவர் சுகம்—என்றே, நம்பினர், எல்லோரும்.

சரசியாவாள்! அந்நேரத்து அழகியாவாள் என்று, கிஞ்சித்தும் எண்ணவில்லை, மக்கள்.

ஆனால் காண்பதென்ன? கட்டிலில், காமுகர், மாறுகின்ற காட்சி. திண்ணையில், நோயுடன் புருடன் வாடுகின்ற கோலம். அவனுடனும் இவனுடனும் ஆடுகிறாள்— பாடுகிறாள். 'அடுக்குமா?' என்று கேட்டால், எல்லாம் என் புருஷனுக்காகத்தான்.—என்று சொல்லுகிறாள்.

*

பரவசம்! பாராட்டு!! மலர்மாலை! மகிழ்ச்சி!—சிந்தைகளிக்கும் விதத்தில் செய்திகள் வருகின்றன, செஞ்சீனா சென்றிருக்கும் நேரு பண்டிதரைப்பற்றி.

மாசேதுங்கைச் சந்தித்தார்— வழியில் ஹோசிமினைப் பார்த்தார்—பத்துலட்சம் மக்களின் மகத்தான வரவேற்பு—என்று செய்திகள், கூறுகின்றன.

நேரு, சாதாரணமானவரல்ல. சர்ச்சில் அல்ல—அட்லி அல்ல. ஒரு நாட்டின் விடுதலை இயக்கத்திலே வளர்ந்த தலைவர். அதேபோலத்தான், மாசேதுங்கும், ஹோசிமினும். கஷ்டநஷ்டங்களைக் கடந்து இன்று அரசுப்பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள்.

சந்திக்கும் இருவரும், விடுதலைப் போரிலே ஈடுபட்டு, வெற்றிபெற்றவர்கள்.

எனவே, பண்டிதரைப் பார்க்கும்போது மாசேதுங்குக்கும், மாசேதுங்கைப் பார்க்கும்போது பண்டிதருக்கும், ஒரு தன்னம்பிக்கையும் தனி மகிழ்ச்சியும் ஏற்படவே செய்யும்.

"உங்கள் நாட்டைக் கண்டுபோக வந்தேன். புதியமுறையில் நூதன சமூகத்தை அமைக்கிறீர்களாமே. என்னுடைய நாடும், சுதந்திரம் பெற்று ஏழு ஆண்டுகளாகிவிட்டன. நாங்கள் சாதிக்காத காரியங்களை நீங்கள் செய்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஏழைகள் குறைவாம். இன்பம் அதிகமாம். பட்டினி இல்லையாம்—உங்கள் பகைவன் சியாங்கேய்ஷேக் செய்துவிட்டுப் போன அக்கிரமங்களை ஒழித்துவிட்டீர்களாம். எப்படிச் செய்தீர்கள்; காட்டுகிறீர்களா; எனக்குச் சொல்லுகிறீர்களா?"

சீனாவுக்குச் சென்றிருக்கும் பண்டிதர், இப்படிக் கேட்டு வருவதற்காகவே சென்றிருப்பதாக இங்குள்ளோர் எண்ணிக் கொண்டுள்ளனர். தலைவர்கள் அல்ல மக்களுக்கு அப்படிப்போர், ஆசை சிவப்பு சீனாவின் எழிலைக்காணும் பண்டிதர், பாலைவனம் சோலைவனம் ஆனதன் வகை வழிகளை அறிந்து இங்கே அமுல் நடத்துவார்—நாம் ஏற்றம் பெறலாம், என்று எண்ணுகின்றனர்.

இந்த ஆசையுடன் பண்டிதர் சென்றிருந்தால், அவர் பாராட்டப்படவேண்டியவரே. ஆனால், சென்றிருக்கும் நோக்கம் அது, அல்ல.

அவரே தெளிவு படுத்தியிருக்கிறார், ஒரு நிருபரிடம் பேசிய போது:—

"நீங்கள், சீனாவுக்குச் செல்வதின் நோக்கம், என்ன?"

"பதினெட்டு மாதங்களாகவே, அதைப் பற்றிப் பேசப்பட்டு வந்தது. ஆனாலும், அங்கே செல்லக்கூடியது நிலை, ஜினிவா மகாநாட்டுக்குப்பிறகே ஏற்பட்டது. ஆதலால்நான் இப்போது போகிறேன்"

சூழ்நிலை! ஜினிவாமகாநாடு!! சொல்லியிருக்கிறார், பண்டிதர்— இந்தோசீனத்து நிருபரிடம். அதனால் தான், ஐயத்தோடு உரைக்கிறோம், அன்பர் நேரு, புது சீனத்தின் புதிய பாதைகளைக் கண்டு வ அல்ல, சென்றிருப்பது! தன்

அமெரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்த பாகிஸ்தான் பிரதமர் முகம்மது அலி, அவசரமாக தன்னாட்டிலிருந்து அழைப்பு வந்ததன் காரணமாக, திரும்பிக் கொண்டிருக்கிறாராம்.

டைய புகழ் ஜோதியைக் காட்டிக் கொள்ள. அமெரிக்காவை மிரட்ட.

ஜினீவாமாநாட்டில் தான், சீனப் பிரதிநிதி யொருவர் உட்காரவே சம்மதித்தது—அமெரிக்கா. அந்த சூழ்நிலை உருவானதால், இன்று, சங்கடமில்லாமல் செல்லுகிறாராம், பண்டிதர். பக்கத்து நாடாயிற்றே—பல கோடி மக்களைக் கொண்ட தாயிற்றே—புதிய பாதையில் செல்லுகிறதாமே— என்ற ஆவலோடு, அல்ல, அவர் சென்றிருப்பது.

ஆசிய ஒற்றுமையை உண்டாக்க!

ஆயினும் கூறிக்கொள்ளுகிறார், ஜினிவா மாநாட்டுக்குப் பின்னரே, தான் சீனவர முடிவு செய்ததாக. அகில உலக சூழ்நிலை அப்படியிருந்ததாம். ஆகவே, அவரது விஜயத்தின் நோக்கம், நாட்டின் அடிப்படைகளைப்பற்றி அல்ல; மேல் மாடியைப்பற்றி; தானுலவும் இடம்—ஆசிய ஜோதி எனும் இடம் அசையாமல் ஆடாமல் இருக்குமா என்பது குறித்து.

அன்பர், சீனாவுக்குச் சென்று சிந்தை மகிழ்ந்திருக்கும் இந்த நேரத்தில், இந்த உண்மையை எடுத்துக் காட்டவே சங்கடமாயிருக்கிறது, நமக்கு.

"நேரு, எது செய்தாலும், ஏசுபவர்கள் இவர்கள்."

"குறை காணும் கொள்கையினர்."

"இதற்குமா, விமர்சனம்?" என்றெல்லாம், சீறுவோருண்டு. என்ன செய்வது. இந்தியாவின் நிலை, இழிமாதாயிருக்கிறது. இச்சகம் பேசி, ஜோதியை வளர்க்கும் ஆத்மாக்களின் பீடமாகியிருக்கிறது.

அன்பர் நேரு சென்றிருப்பது, செஞ்சீனா.

கம்யூனிசக் கோட்பாடுகளை ஏற்று நடத்தும் இடம்.

அங்கே போயிருக்கிறார், இவர்.

அலை மோதுகிறது, மக்கள் மனதில்— நேரு அறிந்து வருவாரா. அதுவழி செல்வாரா.—என்று.

அதே நேரத்தில், இதோ ஒரு குரல் கேட்கிறது.

"மேற்கத்திய நாடுகளை ஒட்டியே நாங்கள், எங்கள் ஆட்சியை அமைத்துக் கொண்டிருக்கிறோம். அவைகள் எப்படி ஜனநாயகத்துக்கு மதிப்புக் கொடுக்கிறதோ, அப்படியே எங்கள் இந்தியாவும் செய்து வருகிறது. சாத்வீகத்தைக் கடைப்பிடிக்கும், கட்சிதான், எங்கள் காங்கிரஸ். அதன் போக்கு, புரட்சிப் பாதையைக் கொண்டது அல்ல. பலாத்காரத்தை நோக்கமாகக் கொண்டிருக்கும் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு அது எதிரி. கட்சிக்கு மட்டுமல்ல, அந்தக் கம்யூனிசக் கொள்கைகளே, பரவாமல் தடுக்கப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் கட்சி அது"

கம்யூனிஸ்டுச் சீனாவில், பண்டிதர் பவனி வருகிறார்.

அவருடைய சகா— நாட்டின் நாடியான நிதி மந்திரி—தேஷ்முக் இவ்வண்ணம் செப்புகிறார். செப்பிய இடம், **நியூயார்க்!** அமெரிக்காவின் போக பூமி. ஒட்டாவா சென்றிருக்கும் அவர், நியுயார்க் நகர மன்றம் ஒன்றிலே அக். 13-ந் தேதி பேசும் போது, அறிவித்திருக்கிறார், அடிக்கொருமுறை 'அமெரிக்க நண்பர்களே. தப்பெண்ணங்களைப் போக்கிக் கொள்ளுங்கள்', என்று பல்லவி பாடியவண்ணம்.

தெளிவாகத் தெரிவிக்கிறார் — கம்யூனிசக் கொள்கைகளுக்கே, நாங்கள், எதிரி, என்று!!

தேஷ்முக் — சிவஞானம் அல்ல வார்த்தைகளை எண்ணிவிசிட வேண்டிய பலவித பொறுப்புகளில் இருந்தவர். அவர், கூறுகிறார், இவ்விதம்!

சீனா சென்றிருக்கும் பண்டிதரோ 'ஆசிய ஒற்றுமையைப் பற்றிப் பேசுவதாக' அறிகிறோமே அன்றி, நாட்டின் வளர்ச்சி, அதற்குத்தான் கையாளப்போகிற புது முறைகள், இவைகளைப்பற்றி விவாதிக்கவில்லை.

இந்த முறைகளைக் கற்றுக்கொள்வதற்காக, நேரு, சீனா செல்லவேண்டியதில்லை. ஏனெனில், புதுயுகத்துக்கு வழி அமைத்துத் தரும் ரஷ்யாவில், இவரது தங்கையே, இருந்திருக்கிறார் — அங்குள்ள அரசு முறைகளைக் கண்ணாலே கண்டிருக்கிறார். அண்ணனிடம் சொல்லாமலா, இருப்பார்? ஆகவே, அன்பர் நேருவின் விஜயம் அதற்காக அல்ல!!

*

பண்டிதரின் கட்சி எது வென்பதை, சீனா, அறியும்.

அவர் செல்லும் பாதைக்கும் தமக்கும் ஒத்துவராதென்பதையும், நன்கு அறியும்.

ஆயினும், இவரை அழைத்துப் போற்றுவதேன்?

விடுதலை வீரர், என்பதாலா! அல்ல, அல்ல. சீனா, சிவப்பானதுமே, அந்த நோக்கம் இருந்திருந்தால், அழைத்துப் போற்றியிருக்கலாம். அதுவல்ல, காரணம்.

சீனா — தன்னுடைய பொது எதிரி அமெரிக்காவுக்கு, 'இந்தியா என் பக்கம்' என்று காட்டிக் கொள்ள விரும்புகிறது.

எதிரியில்லை என்றாலும், பாகிஸ்தானுக்கு பரிவுகாட்டுகிறது எனும் எரிச்சலுக்கு ஆளாகியிருக்கும் பண்டிதரும், தான் 'ஆசிய ஜோதி' என்பதைக் காட்ட எண்ணுகிறார் —அமெரிக்காவுக்கு.

இதுதான், மூடிவைக்கப்படும், ராஜதந்திரம்! வேறில்லை!!

தன்னுடைய 'ஜோதி'யைக் காட்டிடும் அதே நேரத்தில், அமெரிக்காவையும் தாஜா செய்யத் தயங்குவதில்லை — அதற்கு, 'தேஷ்முக்கு'கள் செல்கிறார்கள்!!

இந்த இரட்டை வாழ்வு, ஏன்?— இதுவே, நமது கேள்வி.

பலரும், இதுபோல அவரைப் பார்லிமெண்டிலே கேட்டிருக்கின்றனர்—அப்போது, கணவனின் காசநோய்க்காக கற்பை விற்பதாகக் கூறினாளே கன்னி—அதுபோல, **'நாடு கஷ்டதிசையிலிருக்கிறது தொழில் வளமும், செல்வமும் பெருகவேண்டுமென்றால் பிற நாடுகளின் உதவி அவசியம். அதனாலேயே, இவ்வண்ணம் எல்லோருக்கும் நல்லபிள்ளையாக நடக்க விரும்புகிறேன்"** என்று பதிலளித்துள்ளார்!

*

எல்லோருக்கும் நல்லவர்!
எந்தப்பக்கமும் சாயாதவர்!
நடுநிலைமை, நாடி.
வம்பு தும்புக்குப் போகாது.
நன்வரையில், முன்ஜாக்கிரதை.

இத்தனை குணாதிசயங்களோடு, ஒரு நாடு இருக்கிறதென்றால், அதுவே பொன்னாடாம்: அத்தகைய நிலைக்கு வரவேண்டுமென்றால், 'யாரையும் எதிர்பார்த்து வாழும் நிலை' கூடாது. உண்டா, பண்டிதருக்கு! நிதியாளும் தேஷ்முக் நியுயார்க் நகரிலே நின்று பேசியதெல்லாம்—அதிகக் கடன் வேண்டுமென்பதற்குத்தானே!! அது சரிவரக் கிடைக்கவேண்டும் —'கிராக்கி'யிருந்தால்தான் எந்தச் சரக்குக்கும் 'மவுசு'. ஆகவே அமெரிக்காவுக்குப் பிடிக்காத நாடுகளு...

[12ம் பக்கம் பார்க்க]

திராவிடநாடு

காஞ்சி] 24—10—54 [ஞாயிறு

வருக, வருக!

தாயகத்துடன் சேர முடிவெடுக்கப் பட்டபோது, எட்டு பேர், எதிர்த்து ஓட்டளித்தார்களாம், பி.டி.ஐ.

பிரெஞ்சு ஆட்சிப்பிடியினின்றும்விடுபட வேண்டுமென 170 தோழர்கள், ஒரு மனதாக வாக்களித்திருக்கின்றனர். கூண்டிலே சிக்கிய கிளி, விடுபட விரும்புவது இயற்கை. எனவே, எதிர்பார்த்த செய்தி அது; ஆச்சரியத்துக்குரியதல்ல. அந்த முடிவுக்கு வந்தவர்களை, சரிதம் மறவாது-அதேபோல எதிர்த்து ஓட்டளித்த எட்டுத் தோழர்களையும் சரிதம் குறிப்பெடுக்கத் தவறாது.

இரு நூறு ஆண்டுகளுக்குமேல், பிரான்சின் பிடியிலே சிக்குண்டு கிடந்தன, புதுவை, காரை, ஏனாம், மாகி போன்ற இடங்கள். இரண்டாவது உலகப்போருக்குப் பின், அழிந்த பூஞ்சோலையாயிற்று, பிரான்ஸ்—ஆயினும் இந்த இடங்களை இழக்கச் சம்மதிக்கவில்லை. மணிக்கொரு மந்திரிசபை மாறினும், பிரான்ஸ், தனது பிடிவாதத்தைத் தளர்த்திக்கொள்ளவில்லை.

"என்ன இலாபம் உனக்கு? பிரெஞ்சுத் திட்டுகளிலிருந்து வரிமூலம் வருமானம் வருகிறதா?"

"வருகிறதா? நாங்கள் அல்லவோ, செலவழித்துக்கொண்டிருக்கிறோம்..."

"அப்படியேன், செய்கிறீர்கள்?"

"எங்கள் பரம்பரைப் பெருமையைக் காப்பாற்றிக் கொள்ள! இந்தியாவில் எங்களது ராஜ்யமும் இருக்கிறது என்று கூறிக்கொள்ள!!"

"அந்த விண்ஜம்பத்துக்காகவா, வேதனையைச் சுமக்கின்றீர்கள்?"

"வேதனையா! அதிலேயிருக்கும் ஆனந்தம், என்ன தெரியுமா?"

இப்படிப்பதில்சொல்லிக்கொண்டிருந்தனர், பிரெஞ்சுப்பூமான்கள்! உலகே, ஆச்சரியத்தோடு பார்த்தது—கடுகைப் பெரிதென எண்ணி கவுரவத்தையும் காசையும் இழக்கும் பிரான்சைப் பார்த்து. அந்தக் கேலி தாங்காமல், பிரான்சு ஆட்சியின் முதல்வராக வந்தார், மெண்டஸ்—பிரான்ஸ் என்பார். வரும்போதே, தமது பணத்தையும் வீரத்தையும் கொள்ளை கொண்ட வண்ணமிருக்கும் இந்தோசீனா உரிமைப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தார். இன்று, இதோ, இந்தத் திட்டுகள் வரும் நவம்பர் முதல் தேதி, விடுதலை கீதம்பாடி—இணையப் போகின்றன, தாயகத்துடன்! தலை வணங்காத அரசே ஒரு முடிவுக்கு வந்து விட்டது. எனினும், எட்டுப் பேர், எதிர்த்து ஓட்டளித்திருக்கின்றனர்! பிரெஞ்சுக்காரரே,புறப்படுவதென முடிவுசெய்து விட்டனர்—இந்த எட்டுப்பேரோ, வேண்டாம் என்று வெளியிட்டிருக்கின்றனர், வாக்கெடுப்பின்போது!!

*

அந்தத் திட்டுகளை மீட்க, அங்கே அறப்போர் புரிந்த தோழர்கள், கீழூர் முடிவு கேட்டு, ஆனந்தம் அடைந்திருப்பார்கள்.

அந்த அறப்போரில் தமது காணிக்கையையும் செலுத்தவறவில்லை, நமது தோழர்கள். அவர்களையெல்லாம், விடுதலைப் போரிலே வெற்றிக் கட்டத்தை அடையாமலிருக்கும் நாம், இருகையேந்தி அழைக்கிறோம்! வாழ்த்துகிறோம்!!

மரக்கூண்டிலே அகப்பட்டுக் கிடந்த கிளி, இப்போது இரும்புக் கூண்டுக்குள்ளே வந்திருக்கிறது. உண்மைதான். ஆனால், அது கிடந்த மரக்கூண்டிலே, 'வெளியான் ஆதிக்கம்' எனும் கழுகும் பூட்டப்பட்டுக் கிடந்தது. அந்தக் கழுகை விரட்டிவிட்டனர், புதுவைக் காளைகள். அதனால் பூரிக்கிறோம், அதேநேரத்தில், டில்லி ஆதிக்கம் எனும் இரும்புக் கூண்டிற்கு அது மாற்றப்பட்டிருக்கிறது என்கிற உண்மையையும் உரைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இதுவரை, பிரெஞ்சுக் கொடி பறந்த கம்பங்களிலே, இனி அசோகச் சக்கரக் கொடிதான் பறக்கும். பிரெஞ்சு அதிகாரிகளின் பீடத்திலே, டில்லியின் தூதுவர்கள் இருப்பர். அதனைச் சகிக்கவேண்டிய சங்கடத்துக்கு ஆளாவர், புதுவை, காரை மக்கள். எனினும், பூரிக்கிறோம். தொடுத்த அறப்போரால், அவர்கள் உணர்த்தியிருக்கும் பாடத்தைக் கேட்டு.

"விடுதலை, விடுதலை" என்று வீரகீதம் முழக்கிக்கொண்டு வீதிகளிலே தோழர்கள் வந்தபோது, பிரெஞ்சுப்பிம்பமான கவர்னர் அதைச் சகிக்கவில்லை — குண்டர்களை ஏவிவிட்டார்—ஆட்சி அம்புகளைத் தூண்டிவிட்டார்—அடியம் உதையுங்கூடக் கிடைத்தது—பலர் சுட்டுக்கொல்லவும்பட்டனராம், எல்லையோரங்களில். அந்த அட்டகாசத்தைக் கண்டு அஞ்சாது, வீரர்கள், விடுதலைபெற்றிருக்கின்றனர்- வெள்ளையன் ஆதிக்கத்திலிருந்து. இந்த வீரம், நமக்குத் தேவை, இது நாள்வரை, அவர்கள் அங்கே—நாம் இங்கே; இடையிலே 'டில்லித் தடை. இனி, நாமும் அவர்களும் கலந்து வாழலாம். இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொள்ளலாம். ஏற்றமும் வீழ்ச்சியும் ஒன்றென எண்ணிடலாம்—அதனால், அவர்களையெல்லாம் வரவேற்கிறோம்; வாழ்த்துகிறோம்.

அதே நேரத்தில்,அவர்களை அடக்கியாண்ட பிரெஞ்சுக்காரனைவிடக் கொடுமையான 'பாசக் கயிற்றை'யும் உயிரைப் போக்கும் 'தேசிய நச்சும்' கொண்டிருக்கிற இன்னொரு கூண்டுக்குள் அவர்கள் வந்திருக்கிறார்கள். இங்கே, கழுகு இல்லை, கூண்டில். ஆனால், கூண்டு இரும்பு. அடிக்கடி கோல்கொண்டு குத்துவர்—கேட்டால் ஆசையின் விளைவென்பர். சொந்தக் கிளிதானே என்று பேசுவர். இத்தகைய சாகசக்காரர்களின் ஆட்சிக்குள் நுழைகிறீர்கள்—எனினும் அஞ்சாதீர்; இருக்கிறோம் நாங்கள்—உங்களது கரமும் எமதுதோளும்ஒன்று சேர்ந்தால், உருவெடுக்கும் உரிமைப்போரின் சொரூபத்தின்முன்பு, இந்த இரும்புக் கூண்டு சுக்கல் சுக்கலாகப்போகிறது, இதற்கான பயிற்சியைச் செய்து வெற்றியும் கண்டவர்கள், நீங்கள். எனவே, மனமகிழ்ச்சியுடன் அழைக்கிறோம்-வருக; வருக.

•

பிரெஞ்சுப்பிடியிலே கிடந்தபோது, நீங்கள் பெற்ற பேறுகள் பல இருக்கலாம். உல்லாசமாகத் திரிந்திருக்கலாம், குறைந்த செலவில் குடித்தனம் நடத்தியிருக்கலாம். இப்போது, நீங்கள் குடிபுகும் மண்டபம், அத்தனை வாய்ப்புகளையும் வழங்காது! மாறாகத் தொல்லைகள் பலவற்றைத் தரும்!! பிரெஞ்சு ஆட்சி, வாயிலே கோவைப் பழத்தை வைத்திருந்த கழுகு! நீங்கள் வந்திருக்கும் ஆட்சி, 'உண்ணாவிரதம்' அனுஷ்டிக்கச் செய்வதில், ஊரறிந்த ஆட்சி!! ஆயினும், பொறுத்துக் கொள்வீர், எங்களைப் போல. புதுவையிலும் காரையிலும் காட்டிய ஆத்திரத்தை அடக்கிய வண்ணம், எங்களது புனிதப் போரில், அணிவகுப்பீர்.

"சீனாவின் தலைவர்கள். செயல் திறன் மிக்க கம்யூனிஸ்டுகள். ஆனால், தங்களுடைய கொள்கையை கண்ணை மூடிக்கொண்டு அவர்கள் கடைப்பிடிக்கவில்லை. ரஷ்யத் தலைவர்களைவிட அதிகமான அளவில், பகுத்தறிவை உபயோகித்து, காரியங்களைச் செய்கின்றனர்"

சீனாவைக் கண்டுவந்த அட்லி.

"போரா, அது! வீண் வேலை!!", என்று உங்களுக்குப் போதிப்போர், உண்டு. இங்கே! "பூதானக் கட்சி! பூமியாளும் கட்சி!! வருக, இங்கே. பெறுக, இன்பம்", என்று அழைப்போரும் உண்டு. அவர்களைப் பற்றியும், எங்களைப் பற்றியும் அறியாதவர்களல்ல— நீங்கள். ஆயினும், அறிவுறுத்துகிறோம்! பெற்றது— முழு இன்பம் அல்ல; அதனல், பெருந்துயரும் தொலையமுடியாது. பிரெஞ்சுப் பிடியின்றும் விடுதலை அடைந்த நீங்கள், இனி, இரண்டு சர்க்கார்களுக்கு குடிபடைகளாகிறீர்கள்! ஒன்று, சென்னை-இன்னென்று, டில்லி. இந்த இரண்டுக்கும், இனி, பிரஜைகள் நீங்கள். சென்னை, அருகேயிருப்பது! உங்களவர்கள் ஆள்வது!! டில்லியோ, பலர் காணுதது-எனினும், அதுதான் பெரிய சர்க்காராம்!! இந்தப் 'பிரச்சனை'களிலே, உங்களுக்கிருக்கும் ஆர்வமும், ஆசையும் அறிவோம் நாம். இதுவரை, 'இரண்டாக' இருந்தாலும், அங்கிருந்தோரின் அண்ணன் இங்கும், இங்குள்ள தம்பியின் குடும்பம் அங்குமாக, வேற்றுமையின்றி வாழ்ந்து வருபவர்கள், நாம். அந்தப் பாசம் அதிகமாகும்,சந்தர்ப்பம்கிடைத்திருக்கிறது—அதோடு, உலக ஏட்டின் ஒரு இடத்திலிருந்த 'காலனி ஆதிக்கம்' எனும் புள்ளி அழிக்கப்பட்டு விட்டது.

அது, ஒரு சாதாரணப்படிப்பினையல்ல! ஆதிக்கத்தை நிலை நாட்டிய, யாரும், அதனை இழக்கச் சம்மதியார்கள். இந்திய உரிமைப் போர் நடைபெற்ற காலத்திலே, இந்தியாவின் மந்திரியாகயிருந்த அமெரிதுரையை அமெரிக்க நீதிபதி ரீட் என்பார் கேட்டாராம்.

"நண்பரே! இந்த, இந்தியாவை விடமாட்டேன் என்று பிடிவாதம் செய்கிறீர்களே—என்ன காரணம்? அங்கிருந்து, ஏராளமான வரிப்பணம் இங்கிலாந்துக்கு வருகிறதோ?" என்று.

பதிலளித்த அமெரி, "அதெல்லாமில்லை! அங்குள்ள ராணுவத்துக்காகவே, நாங்கள் ஆயிரக்கணக்கான பவுன்களைச் செலவழித்து வைத்துக் கொண்டிருக்கிறோம்", என்றாராம்.

"ஏன் அவ்வளவு சிரமம்?", இன்று நீதிபதி கேட்க, அமெரி, சிரித்தாராம்!

புதுவையில், தி. மு. க.

17—10—54 மாலை தி. மு. க. திறப்பு விழா செயலாளர் தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில், ஆசிரியர் இரா. நக்கீரன், துணைச் செயலாளர் செ. கோவிந்தராசன் ஆகியோரின் சொற்பொழிவுடன் சிறப்பாக நடைபெற்றது. பொருளாளர் பாண்டியன் நன்றி கூறினர்.

நேரிடையாகப்பதில் சொல்லவில்லையாம்!! அந்தச் சிரிப்புக்காகவே, பல நாடுகளை ஆதிக்கத்துக் கீழ், வீழ்த்தினர் ஏகாதிபத்யவாதிகள். அந்த ஒரு சிரிப்பின் மூலம், தமது சித்தாப்பையும் காட்டிக் கொள்ள முயன்றது, பிரிட்டிஷ் சிங்கம். கடைசியில், பங்கப்படாமல் தப்பவில்லை!

அதே பாடத்தைப் பெற்ற வண்ணம், நீங்களும், வந்துள்ளீர்கள். ஆனல், சிறு வித்யாசம்—உங்களை இதுவரை ஆண்டோர், அந்நியர்;—இனிமேல் ஆளப்போவது, 'நம்ம சர்க்கார்!' அதனல், பூரிப்பும் பொங்கும்! புது வசதிகள் பெருகும்!!— என்று எதிர்பார்க்கமுடியாது. ஏனெனில், ஆள்வோர் 'நம்மவர்களாக,' இருப்பரேயொழிய, ஆட்டிப்படைப்பது டில்லி ஆதிபத்யமாகும்! அந்த ஆதிக்கம், பிரிட்டனைப்போல, வருமானம் எதுவும் வாங்கவில்லையே என்று கூறுது—வரியெல்லாம் கொடு! என்று கேட்டு வாங்கிக்கொள்ளும், "வரி கொடுத்தோமே, வசதி செய்து கொடு!", என்று கேட்டால், ராணுவத்துக்குச் செலவழித்துவிட்டேன் என்று அதட்டும் குரலில் பதில் அளிக்கும்!! இந்த அக்கிரமம் எங்காவது உண்டா?— அப்படிக் கேட்டால், பாயும்! தாவும்!!

*

புதிய அனுபவம் பெற வந்திருக்கிறீர்கள் — நாங்களும் புத்துணர்ச்சியோடு, அணைக்கிறோம், உங்களை. இந்த இன்பமான நேரத்தில், ஒன்றை நினைவூட்ட விரும்புகிறோம்—எதிர்த்து ஓட்டளித்த அந்த எட்டுப்பேரின்மீது, உங்களிலே பலருக்கு ஆத்திரம் வரும். வீதியிலே போகும் போது வீசலமா, கிண்டல்களை! பூட்டலாமா, ஏசல்அம்புகளை!!—என்ற எண்ணம்கூடப் பிறக்கும். தயவுசெய்து, அதுபோல். செய்யாதீர்கள். அப்படித்தான் ஒரு போது செய்தனர் சர். சி. பி. ராமசாமி அய்யர் என்பவர் மீது—அவரை, இன்று காங்கிரசே அணைத்துப் போற்றுகிறது — அதனல், ஒரு வேளை, நாளை அந்த எட்டுப்பேருக்கும் 'சான்சு' ஏதாவது அடித்தாலும் அடிக்கக்கூடும்-ஆகவே, ஜாக்கிரதையாயிருங்கள்! அப்பேறபட்டது காங்கிரஸ்!! — எனும், எண்ணத்தில் இந்த வேண்டுகோளை, விடுக்கவில்லை உங்களுக்கு. அவர்களும் நம்மவர்கள்! நம்மோடு வாழப்போகிறவர்கள்! அதனல், ஆத்திரமடைய வேண்டாம்—மன்னித்து விடுங்கள்.

உங்களுக்காவது, எட்டேஎட்டுபேர், இருந்தார்கள், எதிர்த்து ஓட்டளிக்க! இங்கேயோ, அதுபோன்ற 'பல எட்டுகள்' உண்டு!! அவர்களையும் தாங்கிக் கொண்டு, வளர்ந்து வருகிறது நம் உரிமை முழக்கம் என்பதால், கேட்டுக் கொள்ளுகிறோம் — அவர்களை, மன்னித்துவிடுங்கள்! நம்மவர்களே, அவர்களும்!!

நல்ல காரியத்துக்கு முட்டுக்கட்டை போடும் 'பேர்'கள் இப்போது மட்டுமல்ல—எப்போதும் இருந்திருக்கிருர்கள். அவர்கள், அதே நிலையில், எப்போதும் இருந்ததில்லை. காலமாற்றம், அவர்களிலே பலரை, வீரர்களாகவும் ஆக்கியதுண்டு. அதனல், அந்த எட்டுப்பேர் மீதும் அன்புகாட்டி, நல்வழிக்கொணர முயலுங்கள்.

ஏனென்றில், நாமிருக்கும் நாடு-இன்னும் நமதாகவில்லை! அந்த நாள் வந்தாலொழிய, முழு இன்பம் இல்லை!! அதற்கு உறுதுணையாக, 'கற்றபாடத்தோடு' வரும் உங்களையெல்லாம், மனமுவந்து வரவேற்கிறோம் — தாய்மார்களே! பெரியோர்களே! மாணவ மணிகளே! தொழிலாளர்களே! வருக, வருக. உங்கள் வரவு நல்வரவாகுக.

★

தடை செல்லாது

"1876-ம் ஆண்டு சட்டம் செல்லத்தக்கது அல்ல என்று, அட்வொகேட் ஜெனரலே ஒப்புக்கொண்டதால், எம். ஆர். ராதாவுக்கு விதிக்கப்பட்டிருந்த தண்டனையை ரத்து செய்வதோடு, அபராதத் தொகை ஏதாவது செலுத்தப்பட்டிருந்தால் அதையும் திருப்பிக் கொடுக்குமாறு உத்திரவிடுகிறோம்" என்று சென்னை ஹைகோர்ட் பிரதம நீதிபதி பி. வி. ராஜமன்னார், நீதிபதி ராஜகோபாலய்யங்கார் ஆகியோர் செப். 18ல், தீர்ப்பு வழங்கினது.

நன்றி

சேலம் மாவட்ட ராசிபுரம் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகரை எதிர்த்து நின்ற என்னைப் பெருவாரியான வாக்குகள் அளித்து தேர்ந்தெடுத்த பொது மக்களுக்கும், பணிபுரிந்த நண்பர்களும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டி. வி. கே. ராமசாமி

★

'பகுத்தறிவு' கண்ணன்

'பகுத்தறிவு' ஆசிரியர் ஜலகண்டபுரம் ப. கண்ணன், 'ஹெர்னியா' எனும் நோயின் காரணமாக வேலூரில் தங்கி சிகிச்சை பெறுவதாகவும் கழக நிகழ்ச்சிகள் எதிலும் கலந்துகொள்ள முடியாத நிலைமையிலிருப்பதாகவும் நிர்வாகி என். ராமகிருஷ்ணன் தெரிவிக்கிறார்.

'நா காக்க!'

"நா, காக்க!"

அந்த நல்லுபதேசத்தைச் செய்திருக்கிறார், அவர்.

"யாகாவாராயினும் நா, காக்க—காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு," என்ற குறளையல்ல—அது கூறும் பொன்மொழியை எடுத்து விளக்கம் கூறியிருக்கிறார்.

வார்த்தைகள், சில வேளைகளில், வாள் வீச்சைவிடக் கொடுமையாகி விடுகின்றனவாம். அறிந்தோ அறியாமலோ பிறர்மீது நாம் வீசும் வார்த்தைகள், அழியாத சிக்கல்களை உருவாக்கி விடுகின்றதாம்.

பிறகு, அதனைத் தீர்க்க எவ்வளவு முயன்றாலும், முடிவதில்லையாம்! நன்மைகள் மலரவே, அது ஒரு பெரிய தடைக்கல்லாகி விடுகிறதாம். நல்ல சொற்கள் கூட, கால ஓட்டத்தில் மறந்து போய்விடும்— ஆனால், இன்னொருவரைப்பற்றி நாம் சொன்ன சூடான வார்த்தைகள், எப்போதும் மாறுவதில்லையாம்.

சொல்லியிருக்கிறார், அவர். மாகாணங்களின் பாசன மந்திரிகள் மாநாடு, டில்லியில் கூடியபோது.

"இரண்டு பேர், சந்திக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஏதோ, ஒரு அர்த்தத்தில், ஒரு வார்த்தையைச் சொல்லி விடுகிறோம். அது, தவறாகப்பட்டு விடுகிறது, இன்னொருவருக்கு! சுருக்கென்று அவர் மனதில் தைத்துவிடுகிறது. பிறகு, அவனுடன், எவ்வளவு முயன்றாலும் நல்லெண்ணத்தோடு நாம், உரையாட முடிவதில்லை. இதே நிலை, இங்கு மட்டுமல்ல; அகில உலக அரங்கிலும் நிலவுகிறது. ஆகையால், வார்த்தைகளை பிறரிடம் வீசுமுன், ஏதோ ஆயுதங்களை எடுத்து எறிவதுபோலவே நாம்எண்ணிடவேண்டும். அவ்வளவு முன் ஜாக்கிரதையாகயிருக்கவேண்டும்"

தெளிவான விளக்கம்! ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து கொள்ள வேண்டிய விளக்கம்.

நாளைய தினம் இந்த உலகில் வாழப் போகிறோம்—இன்று யாரிடம் சூடான சொற்களை வீசினோமோ, அவர்களை மீண்டும் நாம் சந்திக்க நேரும்—இன்று நம்மைவிட தாழ்ந்திருந்தாலும் எதற்காவது, ஒரு நாள் அவருடைய உதவியும் தேவைப்படும். அதனால், எடுத்தேன்! எறிந்தேன்! என்று பேசுதல், ஆகாது. இன்மொழியே, ஏற்றம் தரும்! புண்மொழி, ஆறாது. மனிதனுக்குள்ள விசேஷ உணர்ச்சி, தன் மானம் தான். தீயினாற் சுட்டபுண் ஆறும்—ஆறாதே நாவினால் சுட்ட வடு.—என்றெல்லாம், நமது முன்னோர்கள், ஏராளம் சொல்லியிருக்கின்றனர்.

எனினும், இன்று மனித மன்றத்தில், யாவரையும் ஒக்க நோக்கும் உயரிய பண்பு மறைந்திருக்கிறது. புலியும், வேட்டை நாயும், பசுவும், பச்சோந்தியுமாக இருந்தால் தான் காலத்தை ஓட்டமுடியும் என்கிற சமுதாய அமைப்பிலே, சிக்கிக் கிடப்பதால்—பலரால், இன் சொல், தரமுடிவதில்லை.

"அதோ வருகிறானே! அவன்' எனக்கு எதிரில் போட்டிக்கடை வைத்துவிட்டான். அதனால் என் வியாபாரம் குறைந்துவிட்டது. அயோக்யன்" என்று கூறுகிறான் பழைய கடை பத்மநாபன். இலாபம் குறைகிற எரிச்சலால், அவனை அயோக்கியன் என்று ஏசச் சொல்கிறது.

"என்னத்தைச் செய்தார், என் அண்ணன்; இருந்த சொத்தை எனக்குப் பாதி, என் தங்கைக்குப் பாதியென்று எழுதித் தருவதாகச் சொல்கிறார். எனக்கோ, பிள்ளைக் குட்டிகள் எட்டு! தங்கைக்கோ, ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு!! இரண்டுபேருக்கும், சரி பாதியாம். கொஞ்சம்கூட இருதயமில்லாத ஆசாமி!"

சொத்தைத் தந்தும், சுடுசொல்லைப் பெறப்போகிறோம் என்பதை அறியும் அண்ணன் மனது மாறுகிறது! ஏதோ, மாறிவிடுகிறார். ஆனால், பிறகு, அவர் இறந்தார் எனக் கேட்கிறாள், குறைபட்டுக் கொண்ட அக்கா. தான் ஆடாவிட்டாலும் தன் சரீரம் ஆடாமலிருப்பதில்லை, அவளுக்கு.

இதுபோல, சமுதாய மேடுபள்ளத்தாலும், வாழ்க்கையே ஒரு போட்டி மேடையாக இருப்பதாலும், நேசங்காட்டுவோரிடம், பாசமும், கொஞ்சம் விலகிச் செல்வோரிடம் வெறுப்பும் — இருக்கக் காண்கிறோம், மக்களிடையில்!

இந்த மனோபாவம் மாறி, எல்லோரும் இன்சொல் பேசி மகிழும் நாள், எப்போது வரும்? விடிவதற்குள் முடிகிற காரியமல்ல அது! 'எல்லோரிடமும் அன்பாயிரு' என்ற புத்தமதக் கொள்கையை தெருவெல்லாம் முழக்குவதாலோ, 'ஜீவகாருண்யமே திறவுகோல்' என்ற ராமலிங்கர் போதனையினை நாள்தோறும் கூறுவதாலோ, இந்த நற்காட்சி மலர்ந்துவிடாது. நாடும், அதன் அடிப்படையும், பேதமும் பிளவும் ஒழிக்கப்பட்டாகவேண்டும். பிறகுதான், சகலரிடமும், இன்சொல்லும், மனித சுபாவமும், மலரமுடியும்.

மக்களிருக்கட்டும்! அந்த மக்கள் மன்றத்தைத் திருத்துவதாக உலவுகிறார்களே, அரசியல் மேதைகள், அவர்களாலாவது, சுடுசொல் வீசாத பழக்கத்தைக் கையாளமுடிகிறதா? எரிச்சலும், 'அவர்கள் வளர்கிறார்களே' எனும் ஆயாசமும் குடையும்போது, குத்திடும் ஊசிகளாகிறார்கள். நான் சென்ஸ்—காட்டுமிராண்டி— கொள்கையில்லாதவர்கள்— என்றெல்லாம், ஏசுகிறார்கள். அந்தச் சொற்கள், எவ்வளவு தூரம், இருதயத்தில் பாயும் வேலாகி விடுகின்றன.

அதனால் தான், டில்லியில் அறிவுரை வழங்கியவர், அவ்வண்ணம் தெரிவித்திருக்கிறார்.

நற்சொல்! நாட்டு மக்களுக்குத் தேவையான நல்லுரை.

கூறியவர், யார் தெரியுமா? நம் மனதை யெல்லாம் புண்படுத்தும் விதத்தில், 'நான்சென்ஸ்' என்றும் 'காட்டுமிராண்டி' என்றும் ஏசினாரே, அந்தப் பண்டித நேரு தான். ஆச்சரியப்படுகிறீர்களா? அக் 13-ந் தேதி, புது டில்லியில் தான் இந்தப் பொன்மொழியைப் புகன்றார். அன்று, அப்படி—இன்று இப்படி. ஏன்? அதுதான், தெரியுமே உங்களுக்கு—அவர், ஒரு, வானவில்!

பிறப்பு

சேலம் வனவாசித் தோழர் ஞானேஸ்வரன் துணைவி நாகம்மாளுக்கு 14—9—54-ல் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. பொன்முடி என்று பெயர் சூட்டப்பட்டது.

'சொக்குப்பொடி' போட்டு!

> ஜோதிடம்! ராசிபலன்!! என்பது பெரிய தோர் தொத்து நோயாகி விட்டது. ஏடுகளின் பிழைப்பும், இதனால் ஓடுகிறதாம்! பெரிய மனிதர்கள் பலரும், இதனை, நம்புகின்றனர்—இன்னும். இதுபற்றி சைவக்கிழார் C. M. ராமச்சந்திரம் (செட்டியார்) எழுதுகிறார்...

பெரிய ஊர்களில் மக்கள் போக்குவரத்து மிகுதியாக இருக்கும்பாதைகளில் இரு ஓரங்களிலும் பறவைக் கூண்டு வைத்துக்கொண்டும், கைரேகைப் படம் வைத்துக்கொண்டும், சில ஆட்கள் உட்கார்ந்துகொண்டிருப்பார்கள். தெருவில் போகும் ஏழை மக்கள், ஆண்களைப் பார்க்கிலும் மிகுதியாகப் பெண் மக்கள், அவனிடம் சென்று ஆருடத்தை ஆவலுடன் கேட்டும், கைரேகைகளைக் காட்டியும் தங்கள் எதிர்காலத்தை அறிய விரும்புவார்கள். திரும்பிப் போகையில் துட்டுக்கொடுத்துவிட்டுச் செல்வார்கள். இந்த வகையில் குருவிக்காரர்களும், ரேகைக்காரர்களும் நாளொன்றுக்கு இரண்டு ரூபாய்க்குக் குறையாமல் ஏழை மக்களிடம் பறித்துக்கொண்டு எதிர்காலத்தில் தங்களுக்கு ஒரு நல்ல பிழைப்பைத் தேடிக்கொள்ளுகிறார்கள், இந்தப் பிழைப்பு நாளுக்குநாள் பெருகிக்கொண்டு வருவதை நாம் நேரில் கண்டு வருகிறோம். ஏழை மக்களுடைய அறியாமையைத் துணைகொண்டு சில வஞ்சகர்கள் அவர்களை ஏமாற்றிப் பிழைக்கிறார்கள். இது இருக்க, பெரிய ஊர்களில் நடுத்தரமான வாழ்க்கையுள்ள தெருக்களில் அங்கங்கே ஒவ்வொரு விளம்பரப் பலகை தொங்கிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். வழக்கறிஞர், வைத்தியர், வர்த்தகர்போன்றவர் விளம்பரப் பலகைகளோடு இடையிடையே ஜோதிடர் விளம்பரப் பலகைகளும் தொங்கிக்கொண்டிருக்கக் காண்கிறோம். முன்னாளில் ஊருக்கொருவன் பரம்பரைப் பண்டிதன் என்ற பெயரில் வைத்தியமும், ஜோதிடமும் சொல்லுவான். இன்றைக்கோ என்றால், பெரிய நகரங்களில் தெருவுக்கொரு ஜோதிடன் விளம்பரப்பலகையைத் தொங்கவிட்டுக்கொண்டு தன் பிழைப்பை நடத்துகிறான். இப்படிப்பட்ட ஆட்களிடம் செல்லும் மக்கள், நடுத்தர வாழ்க்கையில் உள்ளவர்களேயாவர். அவர்கள் தங்கள் வருவாயில் ஒரு கூறினை, இதற்கெனச் செலவழிக்கவும் ஆயத்தமாக இருக்கின்றனர். இவர்கள் போன்றவர்களுக்கு ஆருடம் சொல்லிப் பணம் பறிக்கும் ஆருடர்கள் இன்று கணக்கின்றி வளர்ந்துவிட்டனர். இவ்வளர்ச்சியைப் பெரு நகரங்களில் கண்கூடாகக் காண்கிறோம்.

மேலும், செய்தித் தாள் வாயிலாக விளம்பரப்படுத்தும் பிரபல ஜோதிடர்கள் பலர் நிரம்பப் பொருள் சம்பாதித்துவிடுகின்றனர். இவர்கள் எதிர்காலத்தை எழுதிக் கொடுப்பதாகச் சொல்லிக் கால அளவிற்குத் தக்கவாறு பணம் வாங்குகின்றனர். துன்பத்திற் சுழலும் செல்வர்கள் இவர்களிடம் சந்தர்ப்பவசத்தால் சிக்கிவிட்டால் அவர்கள் நிலை சிலந்தி வலையில் சிக்கிய ஈயின் நிலையை ஒக்கும். இப்படிப் பட்டவர்கள் செய்தித் தாள்களை வெளியிடவும் தெரிந்து கொண்டனர். மாதாந்தரங்களை பதிப்பித்தும் வருகின்றனர். போதாக்குறைக்கு தினசரிச் செய்தித் தாள்களிலும், மாதப் பலன்களையும் தினப் பலன்களையும் வெளியிடத் தொடங்கிவிட்டார்கள். அந்த வகையில் அவர்களுடைய தாள்கள் மிகுதியாகச் செலவழிய ஏதுவாகின்றன. முன்னாளில் தமிழ்நாட்டு ஜோதிடர்கள் மட்டும் இருந்தார்கள். தற்போது கேரளம், கன்னடம் போன்ற நாட்டு ஜோதிடர்களும் தமிழ்நாட்டில் பொருளீட்டத் தொடங்கிவிட்டார்கள். இவர்களுடைய வலைகளில் பணக்காரர்கள் வலுவில் சென்று விழுந்து தங்கள் பணத்தை மிகுதியாக இழக்கின்றனர்.

மேலே சொல்லியபடி ஏழைகளுக்குத் தெரு ஆருடனும், நடுத்தரமானவனுக்கு விளம்பரப் பலகைச் சோதிடனும், செல்வர்களுக்குச் செய்தித் தாள் ஆருடனும் எதிர்காலத்தைத் திட்டமாகக் கூறுவதாகக் கூறி ஏய்த்துப் பிழைத்து வருகிறார்கள். இப்படிப் பிழைப்பவர்கள் மக்களின் நலத்தை விரும்பிப் பிழைக்கிறார்களா? அல்லது தங்கள் சுயநலத்தை விரும்பிப் பிழைக்கிறார்களா? நன்றாய் ஊன்றிப் பார்த்தால் மக்களுடைய அறியாமையை அடிப்படையாகக் கொண்டுதான் தங்கள் வாழ்நாளைச் சுகமாகக்கழிக்...

> "நாடு முழுமையும் ராசிபலன் பார்ப்பதென்பது சர்வ சாதாரணமாயிருப்பதால், அவைகளை வெளியிடுவதில் எவ்விதத் தீங்குமில்லை. எனவே பத்திரிகைகள் யாவும் தாராளமாக வெளியிடலாம் எனக் கருதுகிறோம்" என்று அகில இந்திய பத்திராதிபர்கள் புது டெல்லியில் அக். 14-ல் தீர்மானம் போட்டுள்ளனர்! அறிவை வளர்க்கும் ஆசிரியர்கள்!! செல்வதோ, பணம் தேடும் பாதையில்!!!

> "நமது நாட்டில்,ஏனிந்த நட்சத்திரங்களைக் கட்டிக்கொண்டு நமது ஜனங்கள் அழுகிறார்களோ, எனக்குப் புரியவில்லை. நட்சத்திரங்களின் நடவடிக்கைக்கும் மனிதனின் காரியங்களுக்கும் என்ன சம்பந்தமோ? அப்படி ஏதாவது சம்பந்தமிருந்தால், நம்மைப்பற்றி, அவைகள் கவலைப்பட்டுமே! ஜோசியர்களை நாடி ஓடுவது இப்போது அதிகமாகி வருகிறது. ஜோசியர்கள்பாடு யோகம் தான்!!"
>
> நேரு பண்டிதர், கொச்சியில்.

கிறார்கள் என்பது தெற்றெனத் துலங்கும். இவர்களுடைய பிழைப்பிற்கு அடிகோலி, அவர்களால் ஏமாற்றப்படாதவர்கள் வெகு சிலரே எனக் கூறலாம். தெருக் கூட்டி முதற்கொண்டு உயர்நீதி மன்றத்தார் வரைக்கும் இவர்களுடைய வலையில் சிக்கி அழிகிறார்கள். என்றால், இவ்வறியாமைக்குக் காரணம் படிப்பின்மைமட்டுமல்ல; அறிவின்மையாகிய தடிப்பே காரணம் என்று கூறலாம். ஒருவனுக்குத் துன்பம் வந்த காலத்துப் பகுத்தறிவு ஓடிவிடுகின்றது. வெறி பிடித்த நாய்போல் அவனுடைய மனது தலைவிரித்து ஆடுகின்றது. இந்த வகையில் மக்களின் தற்கால மனப்போக்குச் செல்லுகின்றது. இறந்தகாலத்தை நாமறிந்தோம் நிகழ்காலத்தை ஒருவாறு அறிகிறோம். ஆனால் எதிர்காலத்தை அறியமாட்டோம். அதை அறிய வேண்டுமென்ற ஆவல், நமது நிலையில்லா மனதைத் தூண்டிக்கொண்டே வருகிறது. எதிர்காலத்தை அறியாமலிருப்பதே நலமாகும். வருவது வரட்டும், அதைப் பற்றி ஏன் கவலைப்படவேண்டும் என்ற மனத்தோடு இருப்பவனுக்குக் கவலையே இல்லை. எதிர்காலத்தை அறிய விரும்பி அது நன்மையென்றால் மிகநலம் என இன்பப்படுவோம். தீமையே என்றால் நம் மனது துன்பப்பட நேரிடுகிறது. இந்த இன்ப துன்பங்களை நாம் ஏன் வலுவில் வரவழைத்துக் கொள்ளவேண்டும்? இன்பதுன்பங்களை வருவித்துக்கொண்டு அவைகளுக்குப் பரிகாரங்களைத் தேடுவதே சிலருடைய வாழ்க்கையாக அமைந்துவிட்டது. அந்த வாழ்க்கையை நரக வாழ்க்கை என்று சொல்லாமல் வேறு என்னவென்று கூறி அழைப்பது? அந்த மாதிரியான துன்பமும், நல்வாழ்க்கையும் வேண்டவே வேண்டாம். எதிர்காலம் அறியாத மகன் அமர வாழ்க்கையில் இருப்பான் அல்லவா! அதுவே நலம் பொருந்திய வாழ்க்கையல்லவா! மனிதனுடைய வாழ்க்கை, இன்பமும் துன்பமும் விரவிய வாழ்க்கையாகும். துன்பத்தை முன்னமே அறியாமலிருந்தால் அதுவும் இன்பமேயாகும். எவனொருவன் துன்பத்தை இன்பமாகக்கொள்கிறானோ அவனே ஞானி அல்லது அறிவு நிறைந்தவன் ஆவான்.

★

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

டன் பிரியங்காட்டுவோம்—என்பது தான் நேருவின் கொள்கையாகயிருக்கிறதே ஒழிய, நாட்டுக்கு நல்லது செய்யும் பாதைகளைக் காணும் ஆர்வம், எங்கேயிருக்கிறது? இருந்திருந்தால், சுதந்திரம் பிறந்து, ஆண்டுகள் ஏழாகியும் நல்லது நாடும் பாதைகளில் செல்லாமல், அந்தஸ்து வேட்டையிலீடுபடுவாரா?

ஏன் இப்போக்கு என்று கேட்டால்—நாடிருக்கும் க்ஷீண திசையையும், அதனை நல்ல நிலைக்குக் கொண்டுவர பிறர் உதவி அவசியமாக இருப்பதையுமா, செப்புவது? கன்னியின் கதை தானே ஞாபகம் வரும், மக்களுக்கு.

காச நோய்க் காரனென்றாலும், இட்லி சுட்டோ, அங்காடிக் கடை வைத்தோ அவனையும் பராமரித்து தானும் வாழக் கற்றுக் கொள்ளாமல், கற்பை விலை கூறுவதும், அதற்குக் காரணமாக கணவனுடைய காசநோயைக் காட்டுவதும், நல்லோர் ஏற்கக் கூடிய செயலா?

நாடு, எவ்வளவு பெரிய நம்பிக்கையை வைத்திருந்தது, காங்கிரசிடம். அந்த நாடு, தவிக்கும் போது, நாயகி, வேட்டையிலீடுபடுவதா? அதற்கு விளக்கம் வேறு கூறுவதா.

என்ன சொன்னாலும்— எந்த மாற்றங்களைக் கூறினாலும் கட்டுப்படக் கூடிய மக்கள் அல்லவா, பண்டிதருக்குக் கிடைத்தவர்கள். அவர் மனம் பதைக்காதபடி, பல செயல்களைச் செய்யலாமே. அடிப்படையையே மாற்றி அமைக்கப் போகிறேன்—ஏழையும் பணக்காரனும் இருப்பது ஆண்டவனது படைப்பையே கேலி செய்வதாகும் என்றார் காந்தியார்— ஆகவே, இன்று முதல் எல்லா உடமைகளும் சர்க்காருக்குச் சொந்தம். ஏழை மக்களே— உங்களைத் தான் நம்புகிறேன்— கை கொடுங்கள்— கனிமரச் சோலையாக்குகிறேன், என்று கூறினால், மக்கள், வரவா தயங்குவர்? இங்குள்ள நிலைமையில் இருந்தவர்கள் தானே, சீனத்து மக்கள். அவர்கள் உள்ளங்களைக் கவரும் திட்டங்களை; ஒருவருடைய உதவியும் இன்றி, செய்ததால் தானே சிறப்போடு நிமிர்ந்து பார்க்கிறார்கள்? அவ்வழி விட்டு, ஆசைப் பேச்சால், அரசியல் கட்டிலுக்கு ஆசாமிகளை அழைக்கும் இந்த விளையாட்டேன்?

பண்டிதர், போனார்! மக்கள் வாழ்வுக்கான திட்டங்களைக் கலந்து பேசினார்.— என்பதற்குப் பதில், ஆசியாவின் ஒற்றுமையைப் பற்றிப் பேசினார்; அடுத்த மகா யுத்தம் ஏற்படாமல் தடுப்பதைப் பற்றி ஆலோசித்தார்— என்று, செய்திகள் வருவது? அதே நேரத்தில், **கம்யூனிசக் கொள்கைகளையே** கருவறுப்பதே எம் நோக்கம் என்று, மற்றோர் அமைச்சர் கர்ஜிப்பது?

தோழர்காள்! நீங்களே, எண்ணிப் பாருங்கள்— எவ்வளவு வேதனையான நிலைக்கு இந்த நாட்டை இழுத்துச் செல்லுகிறது, பண்டிதர் ஆட்சி?

கொட்டு முழக்கிலே, நமக்கு உண்மை, தென்படாமலிருக்கலாம்.

ஆனால், அதற்குப் பிறகு...? அதையே, யோசிக்க வேண்டுகிறோம்.

அடிப்படை மாறினாலொழிய, வாழ்வில்லை.

அரசு, அந்தஸ்து வேட்டையின் பீடமாகிவிட்டது.

அதன், பெரிய மனிதராக இருக்க விரும்புகிறார், நேரு,

அவ்வளவு தான், விஜயத்தின் நோக்கம்! வேறில்லை.

★

வருந்துகிறோம்

நமது நண்பரும் பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியருமான தோழர் க. அன்பழகன் எம்: ஏ. அவர்களின் மாமனாரும், தோழியர் வெற்றிச்செல்வி – அன்பழகன் அவர்களின் தந்தையாருமான, திரு. கிருஷ்ணசாமி அவர்கள் 20—10—54 காலை 10-மணிக்கு புரசைவாக்கத்திலுள்ள தமது இல்லத்தில் இயற்கையெய்திய செய்தி அறிந்து மிகவும் வருந்துகிறோம். தன்னுடைய வாழ்க்கையில் தான் அடையவேண்டிய ஆசைகளையெல்லாம் நிறைவேற்றிக்கொண்டவர், அவர். மூத்த மகனார் தோழர் ராஜசுந்தரம் அவர்களை டாக்டராகவும், இளையமகன் தோழர் ஜெயபால் அவர்களை இன்சினீயராகவும், ஆக்கிவிட்டதோடு, அவர்களையும் தோழர் அன்பழகன் அவர்கள் தம்பதிகளையும் பேரக் குழந்தைகளையும் கண்டு, பூரிப்போடு, இருந்தவர். அத்தகையவரை பிரிந்து வருந்தும் நமது நண்பர்களின் துயரத்தில் நாமும் பங்குகொள்கிறோம்.

24. வாக்குமூலம்

சர்க்கார் வக்கீல் கிருஷ்ணசாமியும் ஆறுமுகமும்தான் அந்த அறையில் எஞ்சி நின்றவர்கள்.

ஆறுமுகம், தன் தாயும் தங்கையும் சென்ற திக்கையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அதுவரையில் அவனுக்குத் தோன்றாத பாசம் ஒன்று அந்த நேரத்தில்தான் தோன்றியது. இந்த நிமிடம் வரை உலகத்தில் தான் ஒரு தனி மனிதன் என்ற எண்ணம்தான் அவனுக்கு இருந்தது. அவனுடைய வாழ்க்கைப் பாதையில் அவனுக்குத் துணை யாருமே இல்லை என்ற எண்ணம் அவனை அறியாமலே வளர்ந்திருந்தது. ஆனால் அஞ்சலையின் புலம்பலும், செங்கமலத்தின் விம்மிய குரலும், உலகத்தில் அவனுக்காக அமைந்த பாதையில் அவனோடு அவதிப்படுபவர்களுமிருக்கிறார்கள் என்பதை உணர்த்தியது. தான் செய்யும் தவறுகளும், தனக்கு நேரும் ஆபத்தும் தன்னுடைய தாயையும், தங்கையையும் எந்தளவு பாதிக்கிறது என்பதை அப்போதுதான் அவன் உணர்ந்தான். தன்னுடைய உடலிலும், உள்ளத்திலும் ஒவ்வோர் பாகம் அவர்கள் என்பதை அவனால் அறிய முடிந்தது. இந்த உணர்வு அவனை இன்னும் துயரக்கடலில் ஆழ்த்தியது. வெறித்த கண்களோடு கிருஷ்ணசாமியைப் பார்த்தான்.

அவரோ பயங்கரப் பார்வையோடு தன் வேலையை ஆரம்பித்தார்!

"ஏண்டா, ஆறுமுகம்! உன்னால் எவ்வளவு பேர்களுடை மனம் புண்படுகிறது பார்த்தாயா? இதைவிட இன்னும் ஆயிரக்கணக்கானவர், உன் செயலுக்காகக் கண்ணீர் வடித்தவண்ணமிருக்கின்றனர்!

பத்திரிகைகளிலே உன் வழக்குத்தான் எழுதப்படுகின்றது!

எந்தக் கோர்ட்டிலும் உன்னைப் பற்றித்தான் விவாதம்!

சந்துமுனையிலிருந்து, சாவடி வரை எங்கும், எல்லோரும் நீ செய்த கொடூரத்தைப்பற்றித்தான் பேசுகின்றனர்!

நீயோ எதுவும் பேச மறுக்கிறாய். எனக்குத் தெரியும்; அந்த நல்லமுத்துவும், நெடுமாறனும் உன்னைக் காப்பாற்றுவதாகக் கூறிப் போயிருப்பார்கள். ஆனால், அதை நம்பினால் நீ தான் முட்டாளாவாய்! ஆம்! அவர்களை நம்பியவன் ஒருவனாவது இதுவரை தப்பியதில்லை. அவர்களுக்கு விளம்பரம் கிடைத்ததைத் தவிர யாரும் லாபம் அடைந்ததில்லை. அவர்களும் அதைத்தான் எதிர்பார்க்கின்றனர். விளம்பரம்! விளம்பரம்!!

ஏழைக்குதவினேன்; ஏமாளிகளுக்கு உதவினேன்; கூண்டிலேறியவனுக்கு உதவினேன்! இப்படி நாட்டிலே பிரச்சாரம் செய்து 'பிஸினஸ்' செய்வது அவர்கள் தொழில்.

நீ அதற்கு மூலதனமாகிவிடாதே! இப்போது நாம் சட்டத்தின் முன் நிற்கிறோம். இங்கே ஏழை—பணக்காரன் பிரச்னை அல்ல முடிவுசெய்யப்போவது! குற்றம் செய்திருந்தால் ஒத்துக்கொள். அதுதான் சுலபமாகக் காரியத்தை முடிக்கும் வழி. இல்லையேல், உண்மையில் இந்த வழக்கில் யார் யார் சம்பந்தபட்டிருக்கின்றனரோ, அவர்கள் பெயரையெல்லாம் கூறு. விசாரித்து, உனக்கு நானே விடுதலை வாங்கித் தருகிறேன்.

என் மகனுக்குக் கூறுவதுபோல் கூறுகிறேன். என் உபதேசத்தைக் கேள், நீ வாழ வழி கிடைக்கும்!"

இவ்வளவு அக்கரையோடு கிருஷ்ணசாமி கூறியதைக் கேட்டுக்கொண்டு பேசாமல் உட்கார்ந்திருந்தான் ஆறுமுகம். அவனுக்கு அவரைப் பார்க்கக்கூடப் பயமாக இருந்தது.

"நல்லமுத்துவுக்கு எந்தளவு இதில் பங்கு?"

"நல்லமுத்து 'அலிபி'ருஜுப்பித்துக்கொண்டதால் பயப்பட வேண்டாம். அவனுடைய தூண்டுதலின் பேரில்தான் இந்தக் காரியத்தைச் செய்திருந்தால், அதையே குறிப்பிட்டு, ஒரு வாக்கு மூலம் கொடு! அவனை நான் கவனித்துக் கொள்கிறேன்!"

ஆறுமுகத்திற்கு ஆத்திரம் வந்தது. ஆனால் அது எப்படி அவனுக்கு உதவிசெய்யும். கிருஷ்ணசாமியின் நாகரீக உடையும், மூக்குக் கண்ணாடியும், அதனுள் தெரிந்த விழித்த விழிகளும் அவனை நடுங்க வைத்தன. அப்படியே அவரைப் பார்த்தான்.

"ஆறுமுகம்! பொன்னி என்னவானாள்! என்று உரத்த குரலில் கத்தினார் கிருஷ்ணசாமி.

'பொன்னி' என்றதும் தூக்கிவாரிப்போட்டது அவனுக்கு. அதுவரை அவளைப்பற்றியே அவன் நினைக்கவில்லை. உத்தமநாதர் கொலைவழக்கில் பொன்னியின் கொலை பெரிய விஷயமாகப் பேசப்படவில்லை! அப்படியே திகைத்து நின்றான் ஆறுமுகம். அவனால் எதுவுமே பேசமுடியவில்லை.

"ஏண்டா, அவளையும் கொலை செய்யத் துணிந்தாய்? குத்துயிராக ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லப்பட்டு அவள் அங்கே இறந்தாள், தெரியுமா?"

"ஐயோ......! அவளைக் கொல்ல நான் நினைக்கவில்லையே!" என்று கதறினான் ஆறுமுகம். உண்மையில் அவன் அவளைக் கொல்லத்தான் நினைக்கவில்லை. ஆனால் அதை விளக்கி என்னபயன்? அவனுடைய வாழ்க்கையில் எந்தக் காரியத்தையும் தவறு என்று தெரிந்து அவன் செய்ததில்லை. அவனுடைய உணர்ச்சிகள், அவனுக்கு எதைக் கூறுகின்றனவோ அதையேதான் செய்து வந்திருக்கிறான். ஆனால் இந்த விளக்கம் பற்றிக் கிருஷ்ணசாமிக்கு என்ன கவலை?

"அவளைத் தகாதகாரியம் செய்து, கொன்றாய். ஆம், ஆம், ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் பரிசோதித்துக் கூறினர்! இது மாதிரி முன்பும்செய்திருக்கிறாயா? போனமாதத்தில் ஹைகோர்ட் பீச்சில் ஒரு பெண்ணைப் பலவந்தப்படுத்தியது நீ தானே? அதற்கு நாலுமாதங்களுக்கு முன் மைலாப்பூரில் பாய் விற்பவன்போல், போய், பணப்பெட்டியில் கை வைத்தது நீ தானே? ...."

இதற்கு மேல் ஆறுமுகத்தால் தாங்கமுடியவில்லை.

"ஐயோ......அதெல்லாம் ஒன்றுமில்லை......எல்லாம் பொய்...பொய்......!" என்று கத்தினான்.

"யார் சொல்வது பொய்டா, பரதேசிப்பயலே! இந்த வாளாடி வெங்கிட்டராமய்யர் மகனிடம் உன்வாலை ஆட்டாதே. இவர் விளையாட்டுக்காக உன்னிடம் பேசவரவில்லை. நான் சொன்ன அத்தனைபேரும் நேற்றிரவு இங்கு வந்து உன்னைப் பார்த்து அடையாளம் கூறிப்போயிருக்கின்றனர். உண்மையைக் கூறிவிடு. சுலபமாகப் போய்விடும். இல்லாவிடில் போலிஸிடம் அடிபட்டுச் சாகப்போகிறே. ஆமாம்! அவர்கள் விசாரிக்க ஆரம்பித்தால், எலும்புதான் மிஞ்சம்!"

ஆறுமுகத்திற்கு ஒன்றும் புரியவில்லை. அவர் எங்கிருந்து இந்தக் கட்டுக்கதைகளைச் சேகரித்தாரென்பதே அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. தான் ஒரு சிறு தவறு பண்ணியதால், எங்கெங்கோ, யார் யாரோ செய்த குற்றங்கள் அவன் தலையில் சுமத்தப்படுவதுகண்டு, உண்மையில் நடுங்கியேபோனான்.

ஒரு நிமிஷம் பொறுத்துக் கிருஷ்ணசாமி மறுபடியும் ஆரம்பித்தார்,

"ஏண்டா, நீ தானேடா, பீச்சில் அந்த குப்பைக்காரியை பலவந்தப் படுத்தியது?

"அப்படி, ஒண்ணுமே நடக்கலீங்க!"

"குஜராத்தி பெண் பாரிஸ்கார்னரில் பஸ்ஸில் ஏறும்போது செயினை அறுத்தது?"

"நான் பாரிஸ் கார்னர் பக்கம் போயே, ரொம்ப நாளாகி விட்டதே!"

"பின், மைலாப்பூர் வீட்டில் நுழைந்தது நீதானே?"

"நிச்சயமா நான் மைலாப்பூர் போயே ஒரு வருஷத்திற்கு மேலாயிடுத்துங்கோ!"

"பொய்! பொய்!! எல்லாம் பொய்! திருட்டுப்பயல்"

ஆறுமுகம் வாயடைத்து நின்றுவிட்டான். அவன் நினைத்தும் பார்க்க முடியாத குற்றங்களைச்செய்ததாகக் கூறினால் அவன் என்ன செய்வது?

"சரிடா, அவைகள் கிடக்கட்டும். பொன்னியை ஏன் கொலை செய்தாய்?

"அவள்தான் போலிசுக்கு என்னைக் காட்டிக்கொடுத்துவிட்டாள் என்று தோன்றியதால்............. ஆனால் அவளைக் கொலைசெய்யும் எண்ணமில்லை. ஏதோ ஆத்திரத்தில்........"

"கொலைசெய்துவிட்டாய்! அது தாண்டா முக்கியம்!! உத்தமநாதரை ஏன் கொலைசெய்தாய்?"

"நான் கொலை செய்யவில்லை. ஆனால் அதைக் கூறி என்ன பயன்?"

"என்ன பயனா? ஆமாம் பொய் கூறிக்கொண்டே எத்தனை நாளைக்குக் காலம் தள்ளமுடியும். சரி. அப்படியானால் நல்லமுத்துக்கு இதில் பங்கு உண்டா?"

"இல்லை.........! இல்லை......!"

"பின் நீதானே கூறியிருக்கிறாய், அவன் அன்றிரவு அங்கு வந்தான் என்று!"

"அது பொய்......"

"ஏன் பொய் சொன்னாய்?"

"அவர்மேல் குற்றம் சாட்டிவிடலாம் என்று தவறுதலாக எண்ணிவிட்டேன்!"

"அப்படியானால் நீதானே கொலை செய்தாய்? உத்தமநாதரின் பையிலிருந்த பணத்தைக் களவாட நீ செய்த முயற்சியின் பலன்தானே இந்தகொலை? அதிகமாகக்குடித்துவிட்டு, நீ செய்த கோரச்செயல் தானே அது?" இப்படி அடுக்கிக் கொண்டே போனார் கிருஷ்ணசாமி.

ஆறுமுகத்தால் அதற்குமேல் சகிக்கமுடியவில்லை. ஆனால் பதிலும் பேசமுடியவில்லை. அவன் செய்த பைத்தியக்காரத்தனத்திற்கு, பலன் அனுபவித்துத்தானே தீரவேண்டும்! உத்தமநாதரின் கொலைக்கு அவன் பொறுப்பாளியா? அவருடைய உடலைப் புதைத்தான்! ஆனால் அதை அவன் செய்ததற்கு அவனால் எந்தக் காரணமும் கண்டுபிடித்துக் கூறமுடியவில்லை. எப்படிக் கூறமுடியும்? அவனுக்குத் தோன்றியதைச்செய்து அவன் பழக்கப்பட்டவனே தவிர, சிந்தித்துக் காரியமாற்றுவது, அவன் இனத்தாருக்கே தெரியாதே! ஆகவேதான் இன்று மறுபடியும் அவன் செய்த காரியங்களை நினைத்துப் பார்த்ததில், அவனுக்கு எந்த விளக்கமும் கிடைக்கவில்லை. ஆனால் ஒன்றுமாத்திரம் நன்கு தெரிந்தது. இந்தக் கிருஷ்ணசாமி எப்படியும் அவனைத் தப்புவிக்கவிடமாட்டார்! உத்தமநாதரைக் கொலை செய்தோமோ இல்லையோ, இனி எல்லாம் ஒன்றுதான். தன்னுடைய புத்திக் கோணலை நினைத்துக் கைகளைப் பிசைந்தான். கிருஷ்ணசாமி அவனருகில் வந்து அவன் தோளில் கைவைத்தவண்ணமே "ஆறுமுகம்! நடந்தது நடந்துவிட்டது. இனி உண்மையைக் கூறிவிடு. அவைகளைப் பார்வையிட்டால் நீதிபதிகள்கூட உன்மேல் பச்சாதாபப்பட்டு உன்னை விடுவிக்கலாம்!" என்று கூறிக் கொண்டே வாயிற்படிப் பக்கம் பார்த்து, "நரசிம்மம்!" என்றார். நரசிம்மம் உடனே கையில் பேனாவும் பேப்பருமாக உள்ளேவந்தான்.

"இதோ, ஆறுமுகம் வாக்குமூலம் கொடுக்கிறான். எடுத்துக் கொள்!" என்றார்.

ஆறுமுகத்திற்கு ஒன்றும் விளங்கவில்லை. நல்லமுத்துவும், நெடுமாறனும் கூறிய உறுதிமொழிகளுக்கும், தைரியவார்த்தைகளுக்கும் அர்த்தமே கிடையாது என்ற உணர்ச்சி ஏற்பட்டது. அதோடு நல்லமுத்துவின் பேரில் மறுபடியும் பழிவராமல் இருக்கத் தான் ஏதாவது கூறவேண்டு

மென்று தோன்றியது. கிருஷ்ண சாமியே ஆரம்பித்துவைத்தார்.

"உம். சொல்லப்பா, ஆறுமுகம்! அன்று மாலை உங்க எஜமானரை காரில் ஏற்றிக்கொண்டு லேபர் கமிஷனர் ஆபிஸிக்குப்போனே ...." என்றார்.

ஆறுமுகம் அதைத் தொடர்ந்து தன் வாக்குமூலத்தை கொடுக்க ஆரம்பித்தான்.

உத்தமநாதருக்குக் காரோட்டியது; லேபர் கமிஷனர் ஆபிசுக்குப் போனது; அங்கிருந்து மைலாப்பூரில் நளினி வீட்டுக்குப் போனது; திரும்ப பீச்சு ரோடு வழியாக பங்களா திரும்பியது; பங்களாவிற்கு வந்தபின் பிள்ளை பிணமாகியதைக் கண்டது; தன்மேல் குற்றம் வருமோ என்று பயந்து அவரைப் புதைத்தது; நல்லமுத்துவின் மேல் வீண்பழி சுமத்தியது; பின் பிடிபட்டதுவரை வரிசையாக எல்லாவற்றையும் கூறிக்கொண்டேவந்தான்.

சுமார் அரைமணி நேரத்தில் அவனுடைய வாக்குமூலம் முடிந்தது.

ஆனால் கிருஷ்ணசாமி எதிர்பார்த்தமாதிரி முன்னேற்றவாதிகளின் பெயரை அதில் சேர்க்க ஆறுமுகம் மறுத்துவிட்டான். தானே எல்லாத் தவறுகளையும் செய்ததாக ஒத்துக்கொண்டான். 'தம்பி' என்று அழைத்த அந்த தூய உள்ளம் படைத்த நல்லமுத்துவுக்கு எந்த இடைஞ்சலும் வருவதை ஆறுமுகம் விரும்பவில்லை அதுவும் தான் சாட்டிய பழியைப் பற்றி கூடக் கவலைப்படாமல், தனக்கே உதவி செய்ய வக்கீலை அழைத்து வந்த நல்லமுத்துவுக்குத் தீங்கிழைக்க அவனுக்கு விருப்பமில்லை.

ஆனால் கிருஷ்ணசாமி கூறுவதிலும் ஒரு உண்மை இருக்கலாம். எங்கோ கிடந்த தனக்கு உதவி செய்ய அவர்கள் முன்வரக் காரணம்?

எப்படியும் தூக்குமேடை ஏறப்போகும் தனக்கு வாதாட ஏன் ஒரு வழக்கறிஞன்?

'விளம்பரம்!', இதுதான் கிருஷ்ணசாமி கூறும் விளக்கம். ஒரு வினாடி அவர் கூறுவது சரிதானே என்று கூடத் தோன்றியது. ஆனால் மறுவினாடியே மற்றொரு பயங்கர உண்மை அவனுக்குத் தெரிந்தது.

நல்லமுத்து நல்லவனோ, கெட்டவனோ, அவனால் உத்தமநாதருக்கு எந்த ஆபத்தும் நேரவில்லையே, எல்லாம் அந்தநளினியும், ஜமதக்னியும் செய்த வேலைதானே? அப்படியிருக்க நல்லமுத்துவின் பேரில் வீண்பழி சுமத்துவானேன்? கடைசிவரை அவன் பெயரை இழுப்பதில்லை என்று முடிவு கட்டிவிட்டான்.

கிருஷ்ணசாமியோ நளினி விட்டிற்கு உத்தமநாதர் போனதைப் பற்றி அதிக கவலை எடுத்துக் கொள்ளவில்லை.

"நளினி வீட்டிலிருந்து திரும்ப உத்தமநாதரைக் காரில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டாயா, இல்லையா?"

"ஹிம்......"

"அவ்வளவுதானேடா, பெரிய மனிதர்கள் நாலு வீட்டிற்குப் போவார்கள் வருவார்கள் அதைப் பற்றி நீ கவலைப்படவேண்டாம். நீ உத்தமநாதரை மண்வெட்டியால் அடித்துக்கொன்றியா?"

"ஐயோ, அதெல்லாமில்லை......"

"என்ன இல்லை. அந்தப் பிணத்தின் உடலில் மண்வெட்டிக் காயங்கள் இருந்ததை டாக்டர்கள் தங்கள் பிரேதவிசாரணையில் குறிப்பிட்டிருக்கின்றனர்."

"இல்லை, சார்......இல்லை.....நான் அப்படியெல்லாம் செய்யவில்லை!"

"என்னடா செய்யலை. இந்தாப்பா நரசிம்மம். இதை எழுதிக் கொள்.', என்று உத்தமநாதரை தான் குடிமயக்கத்தில் மண் வெட்டியால் அடித்துக் கொன்று விட்டதாக எழுதிக்கொள்ளச் சொன்னார்.

வாக்குமூலம் தயாராகியது.

ஆறுமுகத்திற்கு உடல் பூராவும் குளிராகி விட்டது. இரண்டுநாளாய் ஏதோ பெரியதொரு பாரத்தை சுமந்து கொண்டு தத்தளிப்பது போன்ற உணர்ச்சி. இப்பொழுது அது விடுபட்டுப்படு பாதாளத்தில் வந்து விழுந்து விட்டது போன்ற மனேநிலை. போலிஸிடம் அகப்பட்டுக் கொண்டவுடனேயே அவன் வாழ்வு முடிந்து விட்டது. இனி எதையெழுதி, எங்கே கையெழுத்துப் போட்டால்தான் என்ன? நரசிம்மன் வாக்குமூலத்தை நீட்டியபடி நின்றுகொண்டிருந்தான். கிருஷ்ணசாமி பேனாவை நீட்டி, "இதில் கையெழுத்துப்போடு!" என்றார்.

ஆறுமுகம் ஒழிந்து விட்டான்; அவன் குற்றம் மகத்தானது; அவனைத் தப்புவிக்கயாராலும்முடியாது! பேனாவை வாங்கினான். நடுங்கிய கைகளுடன் அதில் கையெழுத்திட்டான்!

அந்த வாக்குமூலத்தை கையில் சுருட்டியவண்ணம், "பரவாயில்லை, நான் எதிர்பார்த்த தொல்லை தரவில்லை!" என்று கூறிக்கொண்டே முன்னால் நடந்தார் கிருஷ்ணசாமி. அவரைத் தொடர்ந்தான் நரசிம்மம்.

அறைக் கதவு சாத்தப்பட்டது. ஆறுமுகம் தனிமையில் அடைக்கப்பட்டான். ஜன்னல்கள் வழியாக சூரிய ஒளி விழுந்துகொண்டிருந்தது.

"மறு நாள் காலை பத்துமணிக்கு பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் அவனுடைய வழக்கு விசாரணைக்கு வரும். அதுவரை அவன் அங்கேதானிருக்கவேண்டும்" என்று கூறிப் போனான் சாப்பாடு கொண்டுவந்த போலிஸ்காரன் ஒருவன்.

நாளை காலை 10-மணி எப்போது வரும் என்று காத்திருந்தான் ஆறுமுகம்!

(தொடரும்)

மகிழ்ச்சிகரமான அறிவிப்பு

தம்பி

16—10—54 இதழ் முதல் 'தம்பி' புதிய பலபகுதிகள் தாங்கி வெளிவருகிறான். விரைவில், தில்லை—வில்லாளன் திட்டும் **காதல்சக்கரம்** எனும் தொடர்கதை தொடங்க இருக்கிறது.

பூமாலை

அக்டோபர் இதழ் முதல் 4-அணா விலையில், சிந்தனைக்கு விருந்தளிக்கும் வகையில் வெளிவருகிறது. தில்லை-வில்லாளன் திட்டும் **ராணியின் காதல்** எனும் காதல் ஓவியம் தொடர்ச்சியாக வந்துகொண்டிருக்கிறது.

விற்பனையாளர் இல்லாத ஊர்களுக்கு விற்பனையாளர் தேவை.

சந்தாதாரர்கள் நிறையச் சேர்ந்து ஆதரவு தருக.

தம்பி அலுவலகம்
சிதம்பரம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

காமராஜர், பாக்கியசாலி. ஆச்சாரியார், இவரை நல்லவராகச் செய்து விட்டார்.

நாமும் மகிழ்கிறோம், 'திருப்பரங்குன்றம்', வெற்றி பெறுவது கண்டு—அதனால், மகிழ்கிறோம். 'குணாள' குலக்கொழுந்தே' எனவும் போற்றுகின்றனர், தோழர்கள்.

அதே நேரத்தில், நாம் மறந்துவிடவில்லை. இழந்த உயிர்கள் இரண்டு—நடமாடும் பிணங்கள் பல உண்டு—தடியடியும் குண்டடியும் தாங்கினோம்—சிறைச்சாலையும் சித்ரவதையும் அனுபவித்தோம்—இத்தனைத் தொல்லைகளுக்குப் பிறகு, இன்று மலர்கிறது கல்லக்குடி. இதே பெயர் மாற்றம், இத்தனை வேதனைகளும் அனுபவித்த பிறகுதானா ஏற்படவேண்டும்? காமராஜர், அப்போதே, சிறிது சிரம் அசைத்திருந்தால் போதும். சிறு அறிக்கை விடுத்து.கொஞ்சம் மிரட்டுங்குரல் காட்டினாலே போதும்—டில்லியிலிருந்து உத்தரவைக் கொண்டுவந்திருக்கலாம், செய்யவில்லை. நாம் குண்டடியும் பிணக்காட்சியும் கண்டு கொண்டிருந்தபோது, பேசாமடந்தையாகவே இருந்தார்-எனினும், இன்று அவரது ஆட்சியில் கல்லக்குடி தோன்றுகிறது.

அவரது முயற்சியின் காரணமாகவே இது முடிந்ததென்றால்—இந்த முயற்சியை ஏன் முன்னரே அவர் செய்திருக்கக்கூடாது? இரண்டு பிணங்களைத் தவிர்த்திருக்கலாமே. உயிர் உடலில் இருந்தால்கூட, உலகின் இன்பங்களை அனுபவிக்க முடியாதவர்களாய் உலவும் பல தோழர்களைக் காப்பாற்றியிருக்க முடியுமே—ஏன் செய்யவில்லை?-என்ற கேள்வி, மக்கள் மனதில் எழும்பாமற் போகாது.

காங்கிரஸ்காரர்கள் அடித்துக்கொள்வார்கள்—ஒருவர் ஆட்சிக்கு வருவார்—அவரது ஆட்சியில் நடைபெறும் அக்கிரமங்களைக் கண்டு மற்றொருவர் மகிழ்வார் — அந்த அக்கிரமங்களைக் கண்ட நாடு, அவர்மீது எரிமலையாகும்—இவர், குதூகலிப்பார்—பிறகு அரசு ஏறுவார்—எதற்காக முன்பிருந்தவர் அக்கிரமங்களைச் செய்தாரோ அந்தக் குறையைத் தீர்த்து, இவர், கோலாகலமாகப் பவனி வருவார்.—இதையா, நாடும் நாமும் எதிர்பார்த்தோம், இந்தக் காங்கரஸ்காரர்களிடம்.

"நியாயத்தைச் சொன்னால் கட்டுப்படுவர்"

"அக்கிரமத்துக்குப் பணிய மாட்டார்கள். ஆனால், சரியானது என்று நீதி நெறியிட்டதைச் செய்யாதவன் மரத்துப்போன பிரேதம் என எண்ணும் மனப் பாங்கினர்."

"ஒரே பொதுக் கொள்கையுடன் வாழ்பவர்கள்."

இப்படித்தானே, எண்ணி வந்தோம்! ஆனால், இன்று நடப்பதென்ன? வேண்டுகோள், மகஜர், தீர்மானங்கள்— எதுவும், டில்லியின் காதுகளைத் திருப்பவில்லை. ஆச்சாரியாரை வெறியராக்கிற்று. பிணமலையும், இரத்தக் குளமும் உண்டான பிறகு, கண்டனக் கணைகளாக மக்கள் மனம் மாறிய பிறகு, அந்த வேகம் உந்தி எறிய ஓடினார், ஆச்சாரியார். அமர்ந்தார், காமராஜர். அவர் காலத்தில், நமது பிரச்னை— அவரது முயற்சியோ, அல்லது டில்லித் தேவதையின் கவனம் இப்போதுதான் திரும்பியதோ.— ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. டால்மியாபுரம், கல்லக்குடியாக மாறியிருக்கிறது. இந்த நிகழ்ச்சி, மகத்தான வெற்றியாகும், நமக்கு. காரணம் எதுவாயினும், களிக்க வேண்டியவர்கள், நாம். களிப்பும், மகிழ்ச்சியும் உருவாகும் நேரத்தில், கண்ணீரும் அரும்பாமலில்லை, நமக்கு. இரண்டு உயிர்கள்.— சாதாரணமா? அரசியல் பீடத்துக்கு, இரண்டு வாலிபர்கள், பலியாவதா. அதைப் பாராளும் ஆட்சி செய்வதா— அதை அந்த ஆட்சியின் கட்சி சகித்துக் கொண்டிருப்பதா. பலர், உலவுகின்றனரே, காலிழந்தும் கையிழந்தும், உறுப்பிழந்தும். அந்தத் தோழர்களின் துயரத்தை, இனி யாரால் துடைத்திட முடியும்?

திமிரோடு பேசிற்று — டில்லி, ஆதிக்கம்,

எச்சரித்தோம், நாம்—திமிர் என்றும் நீடிக்கமுடியாது, உரிமை வென்ற நிகழ்ச்சிகள், சரிதத்தில் உண்டு என்று.

உறுமினர்! சீறினர்!! விளைவு...? அவர்கள் பிடிவாதம் நீடிக்கவில்லை, டால்மியாபுரம், கல்லக்குடியாக மாறி விட்டது.

நாம் கேட்டபோது, பதவியிலிருந்ததும் காங்கிரஸ் தான்.

இப்போது அழித்தெழுதப் போவதும் அதே கட்சி ஆட்சிதான்.

சிறுபிரஷ்— கொஞ்சம் பெயிண்ட்—கால் மணி நேர வேலை. ஆனால், காட்டப்பட்ட அகம்பாவம் பெரிது—வீசப்பட்ட அடக்கு முறைகள் அமோகம்—பலியானோம், நாம்.

இவ்வளவுக்கும் பிறகும், இன்று, நம் கோரிக்கை வெற்றி பெறுகிறது. எப்படி?—காமராஜரின் நல்லெண்ணம் என்போர் இருக்கலாம்.

டில்லி இப்போதுதான் நிலைமையை உணர்ந்தது—என்போரும், இருக்கக் கூடும்.

எதுவாயினும், அப்போது காட்டிய பிடிவாதம், இப்போது சுக்கு நூறாயிருக்கிறது. துப்பிய எச்சலை விழுங்கும் துயரம் ஏற்பட்டிருக்கிறது.

உண்மையில், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு பெரியதோர் வெற்றி என்போம், இதனை.

தி. மு. க. வின் சக்தியை அறிந்து, செய்யப்பட்ட காரியம் என்போம், இதனை.

செய்யாவிடில், மீண்டும் தீ மூளும்.-என அறிந்து, கொண்டு வரப்பட்ட முடிவென்போம்.

வெறி, பணிந்தது! உரிமை வென்றது.—உலகம், அறியும், நன்றாக.

நாம் துவக்கிய அறப்போரை, உரிமைப்போரென மதிக்க மறுத்தனர், ஊராள்வோர்—இன்று அவர்களே, அதனைச் செய்து தர முடிவுசெய்துள்ளனர்.

ஆதிக்கம் சரிகிறது, நம் உரிமை முழக்கத்துக்கு வெற்றி கிட்டுகிறது.

சோலைக்குச் செல்லும் பாதையில் தடையாயிருந்த கல் ஒன்று பெயர்த்தெறியப்பட்டுவிட்டது என்கிற அளவிலே, இது ஓர் வெற்றி.

சோலையை நோக்கிச் செல்லவேண்டும், நாம், இனி. ஒரு சிறு கல்லைப் பெயர்க்கவே சம்மதிக்கவில்லை, தர்பார் பீடம். தன்னுடைய சுயமரியாதைக்கே பங்கம் வந்துவிடும் எனத் துடித்தது-துயரங்களைச் சொரிந்தது.

கடைசியில் வென்றது உரிமை. அழிந்தது அகந்தை—இந்த வெற்றி எதிர்காலத்துக்கு ஒரு அறிவிப்பாகும்.

அந்த வகையில் மகிழ்கிறோம். அதற்குக் காரணமான நமது அரும் தியாகிகளின் வீரத்துக்குத் தலை வணங்குகிறோம். நம்முடைய மகிழ்ச்சியில் பங்குகொள்ள எல்லோரையும்—அவர்கள் எந்தக் கூடாரத்திலேயிருப்பவர்களானாலும், ஆதிக்கம் சாய்ந்தது. நீதி வென்றது என்று மகிழும் மனம் உள்ளவர்களானால்—அழைக்கிறோம், நாளை நாம் அடையப் போகும் இன்பத் திராவிடத்தில் அவர்களுக்கும் இடமுண்டு என்பதால்.

வெற்றி! வெற்றி!!
பெற்றது, தி. மு. க!!!
கொட்டுவீர், முரசு!
குதூகலம், கொள்வீர்!!

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi St, Kancheepuram.